வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959


Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු





மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை



Email : news@eelanadu.lk | மலர் : 04 | 21.06.2023 புதன்கிழமை | இதழ் : 194 | பக்கங்கள் : 16


# பிரபலங்கள் அரச வங்கிகளில் பெற்ற ரூ. 130,000 கோடி கடனை வசூலியுங்கள்

## சம்பிக்க ரணவக்க எம். பி. வலியுறுத்து



கொழும்பு, ஜூன் 21

**உள்நாட்டு கடன் மறுசீரமைப்பால் நடுத்தர மக்கள் பாதிக்கப்படுவர். எனவே, மக்களைப் பாதுகாக்க நாட்டின் முக்கிய வர்த்தகர்களும் செல்வந்தர்களும் அரச வங்கிகளிடம் பெற்ற ஒரு இலட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாய் கடனை மீளப் பெறுவதற்கு நிதி அமைச்சு விசேட கவனம் செலுத்த வேண்டும்.**

- இவ்வாறு ஐக்கிய மக்கள் குடியரசின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நேற்று செவ்வாய்க் கிழமை பாராளுமன்ற வரவு - செலவு திட்ட பணிமனை சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடு வங்குரோத்து நிலை

15

# பலாலி விமான நிலையம் விரிவாக்கப்படுகின்றது!

கொழும்பு, ஜூன் 21

யாழ்ப்பாணம் (பலாலி) சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதையை விரிவாக்கம் செய்யவும் பயணிகள் முனையத்தை விரிவுபடுத்தவும் முடிவு எட்டப்பட்டுள்ளது.

பலாலி விமான நிலையத்தின் ஓடுபாதை 900 மீற்றராக உள்ளது. இந்தப் பாதையை 300 மீற்றர் அதிகரிக்க திட்டமிடப்

15

# இலங்கை குறித்த ஐ. நாவின் அறிக்கை இன்று வெளியாகும்

ஜெனிவா, ஜூன் 21

இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் வாய்மூல அறிக்கை இன்று புதன்கிழமை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டர்க் இன்றைய தினம் இலங்கை

15

### வீதி விபத்துகளை தவிர்க்க

# சாரதிகளுக்கான அபராதத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை!

கொழும்பு, ஜூன் 21

நாடளாவிய ரீதியில் அதிகரித்து வரும் விபத்துகளை தவிர்க்கும் நோக்கில் விதிகளை மீறும் சாரதிகளுக்கான தண்டப் பணம் அதிகரிக்கப்படும் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

விபத்துகளை தவிர்க்க விசேட வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வீதி விபத்துகளை கருத்தில் கொண்டு விதிகளை மீறும் சாரதிகளுக்கு எதிராக தண்டப் பணத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அத்துடன், தண்டனையை அதிகரிக்கவும் கவனம் செலுத்தப்படுகிறது என்றும் அவர் கூறினார். (ஐ)

# இன்று குருந்தூர் வரும் பௌத்த குழுவால் மோதல் சூழல் ஏற்படக்கூடிய அச்சநிலை!

## தடுக்கக் கோருகிறது தேசிய சமாதான பேரவை

கொழும்பு, ஜூன் 21

குருந்தூர்மலைக்கு (இன்று) வருகை தரும் பௌத்தர்கள் குழுவால் நெருக்கடி நிலை - மோதல் சூழல் உருவாகக்கூடிய அச்சநிலை ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் எல்லோரையும் சமமாக மதித்து மோதல் சூழல் ஏற்படாத வகையில் செயல்பட வேண்டும் என்று தேசிய சமாதான பேரவையின் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா எச்சரித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணம் வந்த அவர் யாழ். பொது நூலகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பு இராணுவம் நிலை கொண்டிருந்த காணிகளில் தமது வழிபாட்டுக்காக வைத்த புத்தர் சிலைகளை அவர்கள் எடுக்க



வில்லை. இந்து - தமிழ் மக்கள் மத்தியில் இதனால் நடைமுறை சிக்கல் எழுந்தது. அக்காலத்தில் யாழ். மாவட்ட தளபதியுடன் பேசி புத்தர் சிலைகளை அகற்ற மத நல்லிணக்க குழு முயற்சி எடுத்தது.

தற்போது, மிகவும் பழமை வாய்ந்த முல் லைத்தீவு - குருந்தூர்மலை

15

# போதை கடத்தல்காரர்களை கைது செய்ய நடவடிக்கை!

## பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, ஜூன் 21

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகளை கைது செய்வதற்கான விசேட தேடுதல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் இந்த விசேட வேலைத் திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நாட்டில் துப்பாக்கிச் சூடு மற்றும்

15

# பிரபாகரனின் மரபணு அறிக்கையை வெளியிடுவது பாதுகாப்பு அச்சுறுத்தல்!

## தகவல் கோரிய ஊடகவியலாளருக்கு இராணுவம், பாதுகாப்பு அமைச்சு பதில்

கொழும்பு, ஜூன் 21

தமிழீழ விடுதலை புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் மரண பரிசோதனை, மரபணு பரிசோதனை அறிக்கைகளை வழங்குவது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

போர் முடிந்து 14 வருடங்கள் கடந்தும் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மரண பரிசோதனை, மரபணு பரிசோதனை அறிக்கை

15

# பாணின் விலை 10 ரூபா குறைப்பு

கொழும்பு, ஜூன் 21

நேற்று நள்ளிரவு முதல் 450 கிராம் பாண் இறாத்தல் ஒன்றின் விலை 10 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர் சங்கம் இந்த தகவலை வெளியிட்டது.

கோதுமை மா விலையில் ஏற்பட்டுள்ள மாற்

15

# ஐ. எம். எவ். - அரசு ஒப்பந்தம் எதிர்க்க சஜித் தரப்பு முடிவு!

கொழும்பு, ஜூன் 21

சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் செய்துள்ள ஒப்பந்தத்தை எதிர்க்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நடந்த கட்சியின் குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடனான தன்னிச்சையான கொடுக்கல் - வாங்கலால், அரசாங்கம் கொண்டு வந்த சகல பிரேரணைகளுக்கும் நிபந்தனையின்றி உடன்பட வேண்

15

# பாதீட்டு பணிமனை திருத்த சட்டம் நிறைவேற்றம்!

கொழும்பு, ஜூன்

பாராளுமன்ற வரவு - செலவு திட்ட பணிமனை திருத்தங்களுடன் நேற்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. விவாதத்தின் பின்னர் வாக்கெடுப்பின்றி இது

15

# தமிழர்மீது தொடரும் இனவழிப்பு ஆஸி. பசுமை கட்சி கண்டனம்!

## செனட் சபை உறுப்பினர் கருத்து

சிட்னி, ஜூன் 21

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராகத் தொடரும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையை தமது கட்சி கண்டிக்கின்றது - என்று அவுஸ்திரேலியாவின் செனட் சபை உறுப்பினரான டேவிட் சூபிரிட்ஜ். தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழ் மக்களுக்கு உள்ள சுயநிர்ணய

15




உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# உள்நாட்டு கடன் மறுசீரமைப்பால் எவருக்கும் பாதிப்புகள் ஏற்படாது!

## உறுதி கூறுகின்றது அரசாங்கம்

கொழும்பு, ஜூன் 21
உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு செயல்பாட்டின்போது உள்நாட்டுக் கடனில் எவ்வித குறைப்பும் இருக்காது. அத்துடன், கடன் மறுசீரமைப்பு செயல்பாட்டின் பொருட்டு பண வைப்பீட்டாளர்களுக்கு மற்றும் ஊழியர் சேமலாபம், ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு எந்தவித அநீதியும் இழைக்கப்படாது என்று அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

கடன் மறுசீரமைப்பு என்பது குறைப்பு மட்டும் அல்ல என்றும், உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு என்பதில் கடன் நிறுத்தம் அல்லது வட்டியைக் குறைப்பது ஆகியவையும் அடங்கும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலா பிட்டிய நேற்று பாராளுமன் றத்தில் தெரிவித்தார்.

முன்மொழியப்பட்டுள்ள படி உள்நாட்டு கடனை மறுசீரமைத்தால் நாடு பிற்காலத்தில் பெரும் பின்விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். (ஐ)

# யாழ். பொலிஸ் பொறுப்பதிகாரி விசாரணைக்கு அழைக்கப்பட்டார்!

யாழ்ப்பாணம், ஜூன் 21
யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மனித உரிமைகள் ஆணைக்குழுவால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

முகப்புத்தகத்தில் ஒருவர் இட்ட பதிவுக்காக அவரை அச்சுறுத்தினார் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய பணிமனைக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையிலேயே அவர் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

நாளை வியாழக்கிழமை மதியம் 12 மணிக்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பணிமனைக்கு விசாரணைக்கு சமுகமளிக்குமாறு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்தது. (ஐ-03)



# சந்நிதியான் ஆச்சிரமத்தால் மலையக மக்களுக்கு உதவி

வடமராட்சி, ஜூன் 21
தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் மலையகம் பூனாகலை - கபரகலை கிராமத்தில், மண்சரிவால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாமில் வசிக்கும் மாணவர்களுக்கு 2 இலட்சம் ரூபாய் பெறுமதியான பாடசாலை சீருடைகள் வழங்கப்பட்டன.

இதேவேளை மலையக சிறுவர் இல்லத்தின் பராமரிப்பில் கல்வி கற்று பல்கலைக் கழகத்துக்கு தெரிவான இரண்டு மாணவர்களுக்கு மடிக்கணினிகளும் வழங்கப்பட்டன.

இந்த செயல்திட்ட உதவிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் தனது ஆச்சிரம தொண்டர்களுடன் சென்று வழங்கி வைத்தார். (ஐ-02)

# சண்டிலிப்பாயில் புத்தக அரங்க விழா

யாழ்ப்பாணம், ஜூன் 21
தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50ஆவது ஆண்டையொட்டி "நூறு மலர்கள் மலரட்டும்" என்ற தொனிப் பொருளில் நடத்தப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் 12ஆவது நிகழ்வு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ள முதல்நாள் நிகழ்வாக, ஈழத்து நூல்களை அறிவோம் - நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் கலைஞர் வி. என். செல்வராஜா நினைவு அரங்கில் கலாசார மத்திய நிலையப் பொறுப்பாளர் க. ஜெசிந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் நூல் அறிமுக உரைகளை ஆசி கந்தராஜாவின் "அகதியின் பேர்ளின் வாசல்" நூல் தொடர்பாக ஆசிரியரான சோ. ரோகன்ராஜ், சி. சிவசேகரத்தின் "கல்லாகவே ஆனாள்" கவிதைத் தொகுதி பற்றி கலாசார மத்திய நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் யாழினி விநோத்குமார், அலெக்ஸ் பரந்தாமனின் "பறை யொலி" சிறுகதைத் தொகுதி தொடர்பாக அபிவிருத்தி உத்தியோகத்தருமான டயானா நியூட்டன், பு. கணேசராசாவின் "பொறுப்பது உன் விதியோ?" நாடக நூல் தொடர்பாக ஆசிரிய ஆலோசகருமான பா. மகாலிங்கசிவம் ஆகியோர் வழங்குவர். நிகழ்ச்சியை மாணவியரான ரா. புவியழகி, கு. நிரோஜினி ஆகியோர் தொகுத்து வழங்குவர்.

தொடர்ந்து மாலை 6 மணியளவில் பேராசிரியர் நந்தியின் சிறுகதையைத் தழுவி, ஆசிரியர் பு. கணேசராசாவின் நெறியாள்கையில் உருவான, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்களின் "துப்பல்" நகைச்சுவை நாடகமும், சண் நாடகக் குழுவினரின் தயாரிப்பில், ஆசிரியர் பு. கணேசராசாவின் நெறியாள்கையில் உருவாகி பல விருதுகளை வென்று, இருபதுக்கு மேற்பட்ட அரங்குகளைக் கண்ட "தலையெழுத்து" நாடகமும் அரங்கேற்றப்படவுள்ளன. (ஐ)

# பதிவு செய்யப்பட்டோரிடம் மட்டும் காப்புறுதிகளை பெற வேண்டும்!

## மக்களுக்கு அறிவுறுத்து

கொழும்பு, ஜூன் 21
பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் அல்லது நபர்களிடமிருந்து மாத்திரம் காப்புறுதிகளை பெறுமாறு காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.

காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில்,

சில நபர்கள் தள்ளுபடி அட்டைகள் போன்ற சிலவற்றை பொது மக்களிடம் கட்டணத்துக்கு விற்பது அல்லது சில காப்புறுதி தயாரிப்புகளில் தள்ளுபடிகளை வழங்குவது குறித்து தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மோசடி நடவடிக்கைகள் 2000ஆம் ஆண்டின் இலக்கம் 43இன் காப்புறுதி தொழில் ஒழுங்குமுறைச் சட்டத்தின் விதிகளுக்கு முரணானவை என்று ஐ. ஆர். சி. எஸ். எல். எச்சரித்தது.

குறித்த மோசடி நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கு info@ircsl.gov.lk எனும் மின்னஞ்சல் மூலம் அறிவிக்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

காப்புறுதிக் கொள்கைகள் தொடர்பான சட்டப்பூர்வ வழிகளைக் கடைப்பிடிக்குமாறு பொதுமக்களை வலியுறுத்தி, பதிவு செய்யப்பட்ட காப்புறுதி நிறுவனங்கள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட காப்புறுதி தரகு நிறுவனங்களின் பட்டியலை ஐ. ஆர். சி. எஸ். எல்.இன் www.ircsl.gov.lk எனும் இணையதளத்தி னூடாக பார்க்க முடியுமென தெரிவித்துள்ளது. (ஐ)

# தகராறால் மனைவியின் காலை துண்டித்த கணவன்!

கொழும்பு, ஜூன் 21
கணவனால் தாக்கப்பட்ட மனைவி கால் துண்டிக்கப்பட்ட நிலையில் கம்பஹா பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். எனினும், வெட்டப்பட்ட காலை மீண்டும் இணைக்க முடியவில்லை என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

குடும்ப தகராறு காரணமாக கிரிந்திவெல பிரதேசத்தில் வசிக்கும் 42 வயதான பெண்ணின் கணவனால் தாக்கப்பட்டு கால் துண்டிக்கப்பட்ட நிலையில் அவர் சேர்க்கப்பட்டார் என்று மருத்துவமனை பேச்சாளர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட பெண்ணின் நிலை தொடர்பில் கம்பஹா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் பிரியந்த தெரிவிக்கையில்,

நோயாளியை மருத்துவமனையில் சேர்ப்பதில் தாமதம் ஏற்பட்டமையால் துண்டிக்கப்பட்ட கால் மாற்று சிகிச்சைக்கான சாத்தியக்கூறுகள் இல்லை. அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்றார்.

# காலவதியான சாரதி பத்திரங்களை இரு ஆண்டுகளுக்கு நீடிக்க முடிவு!

கொழும்பு, ஜூன் 21
காலாவதியான சாரதி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலத்தை இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிக்க மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க, சாரதி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பதற்கான நடவடிக்கைகள் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டன.

காலாவதியான சாரதி அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதில் மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இந்த வாரத்துக்குள் வெளியிடப்படும் என ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அச்சடிக்கும் அட்டைகள் பற்றாக்குறையால் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம், பாதுகாப்பு குறியீடு மற்றும் ஒரு வருட செல்லுபடியாகும் காலத்துடன் வழங்கப்பட்டன. சாரதி அனுமதிப்பத்திரங்கள் அச்சடிக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 8 இலட்சம் சாரதி அனுமதிப் பத்திரங்களை இன்னும் அச்சிட வேண்டும்.

நாளாந்தம் 4 ஆயிரம் அனுமதிப் பத்திரங்கள் அச்சிடப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# உரம் கிடைக்காதுவிடின் முறைப்பாடு செய்யலாம்!

கொழும்பு, ஜூன் 21
விவசாயிகளுக்கான உரம், உர வவுச்சர் விநியோகம் தொடர்பான சிக்கல்களை முறையிடுவதற்கு இரண்டு தொலைபேசி இலக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

சிறுபோக நெல் செய்கைக்கான உரத்தை பெற்றுக்கொள்வதற்கான வவுச்சர்கள் இதுவரை கிடைக்கவில்லை எனவும், யூரியா உள்ளிட்ட ஏனைய உரங்களை பெற்றுக்கொள்வது தொடர்பிலும் தொடர்ச்சியாக விவசாயிகளிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைக்கின்றன என்றும் விவசாய அபிவிருத்தி திணைக்களமும் தேசிய உர செயலகமும் அறிவித்துள்ளன.

உரத்தை பெறுக்கொள்வதற்கான வவுச்சர்கள் கிடைக்காவிடின், 071 76 49 054 என்ற இலக்கத்துக்கும்,

உர விநியோகம் தொடர்பான சிக்கல்களுக்கு 077 34 97 565 என்ற இலக்கத்துக்கும் அறிவிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
21.06.2023 புதன்கிழமை
சோபகிருது வருடம், ஆனி 06

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

# இங்கிலாந்தில் ரணில் எதிர்ப்பு?

இங்கிலாந்து சென்றிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமிழ் புலம்பெயர் குழுவினர் எதிர்ப்பு வெளியிட்டிருக்கின்றனர். ரணிலை இனப்படுகொலையாளி என்று குறிப்பிட்டிருக்கின்றனர். மகிந்த ராஜபக்ஷ ஒக்ஸ்போர்ட் யூனியனில் பேசுவதற்காக சென்றபோதே இவ்வாறான எதிர்ப்பு வெளியிடப்பட்டிருந்தது. ஆனால், இந்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் புலம்பெயர் நாடுகளிலுள்ள தமிழ் தொழில் அதிபர்கள் ரணிலை சந்தித்து கலந்துரையாடி மகிழ்ந்திருக்கின்றனர்.

ரணில் எதிர்ப்பு தமிழ் மக்கள் மத்தியில் ஒரு பகுதியினரிடம் இருக்கின்றது. ஆனால், இந்த எதிர்ப்பை அரசியல் மயப்படுத்தக் கூடிய ளவுக்கு வல்லமையுடன் எவருமில்லை. ஒரு கட்டத்துக்கு மேல் தமிழரசு கட்சியாலோ அல்லது தமிழ் தேசியக் கூட்டமைப்பாலோ ரணில் எதிர்ப்பை பெரியளவில் முன்னெடுக்க முடியாது. ஆனால், ரணில் தொடர்பில் அனைவரிடமும் அச்சம் உண்டு. ரணில் விடயங்களை எப்போது வேண்டுமானாலும் தனக்கு சாதகமாகப் பயன்படுத்தும் வல்லமையுள்ளவர் - எனவே, அவரிடம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமென்னும் புரிதல் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளிடம் உண்டு.

புலம்பெயர் சூழலில் ரணிலை எதிர்ப்பதால் ரணிலுக்கே இலாபமுண்டு. ஏனெனில், ரணிலை இனப்படுகொலையாளி என்று கூறும்போது அது மேற்குலகால் ரசிக்கப்படப்போவதில்லை. ஏனெனில், யுத்தத்தை ரணில் விக்கிரமசிங்க வழிநடத்தவில்லை. எனவே - இந்தப் பின்புலத்தில், ரணிலுக்கு எதிரான புலம்பெயர் குரல்களை அடிப்படைவாத தமிழர்களின் குரலாகவே மேற்குலகம் நோக்கும். ஆனால், புலம்பெயர் நாடுகளில் காண்பிக்கப்படும் இவ்வாறான எதிர்ப்புகள் உள்நாட்டில் ரணிலுக்கு ஆதாயத்தை தரக்கூடியது. எனவே, புலம்பெயர் தமிழர்கள் மத்தியிலிருந்து தன்னை இனப்படுகொலையாளி என்று கூறும் போது அதனை ரணில் வெகுவாக ரசித்திருப்பார் எனலாம்.

ரணில் அடுத்த ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து பல்வேறு பக்கங்களிலும் காய்களை நகர்த்தி வருகின்றார். அவருடன் யார் நிற்பார்கள் - அவரை யார் எதிர்ப்பார்கள் - இதுவரையான நகர்வுகளில் எதுவும் தெளிவாகத் தெரியவில்லை. இறுதி நேரத்தில் எதுவும் நடக்கக் கூடியவாறான அரசியல் சூழலே இலங்கைத் தீவில் காணப்படுகின்றது. இந்த பின்புலத்தில் ரணில் கெட்டித்தனமானவர் - உலகத்தை அறிந்தவர் -அறிவாளி - இப்படியான அடைமொழிகள் மட்டும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு போதுமானதல்ல - மாறாக, அடித்தள சிங்கள மக்களின் ஆதரவு கட்டாயமானது. அடித்தள சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கு, ரணிலின் இப்போதைய அணுகுமுறைகள் போதுமானவையல்ல. ரணிலை தென்னிலங்கை அடித்தள மக்களுக்குள் செல்வாக்குள்ள அரசியல் கட்சிகளும் சிவில் அமைப்புகளும் குறிப்பாக தேரர்களும் எதிர்க்காமல் இருக்க வேண்டும்.

அவர்கள் வெளிப்படையாக ஆதரிக்காவிட்டாலும் - எதிர்க்காமல் இருக்க வேண்டும். அவர்கள் ஒருவேளை ரணிலை எதிர்த்து வீதிகளில் இறங்கினால் அது சாதாரண சிங்கள மக்களின் உளவியலை பாதிக்கும். இந்தப் பின்புலத்தில் நோக்கினால் புலம்பெயர் தமிழர்களால் ரணில் எதிர்க்கப்படுவதுதான் அவருக்கு சாதகமானது. குறிப்பாக 2005இல் விடுதலைப் புலிகள் ரணிலை தோற்கடிக்கும் வியூகத்தை வகுத்தனர்.

ஏனெனில், ரணில் ஜனாதிபதியானால் புலிகளால் யுத்தத்துக்கு செல்ல முடியாத நிலைமை ஏற்படும் - இதனை கருத்தில் கொண்டே ரணில் அதிகாரத்துக்கு வருவதை புலிகள் தடுத்தனர். அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் இந்த அணுகுமுறையை சிலர் முன்வைத்து பிரசாரங்களை மேற்கொள்ளக்கூடும். அவ்வாறு நடந்தால் அதிலிருந்தும் ரணில் மட்டுமே நன்மை பெறுவார். எனவே, தமிழர்களின் ரணில் எதிர்ப்பு - அதிகம் ரணிலுக்கே பயன்படும். ஒட்டுமொத்த தமிழ் மக்களும் ரணிலை எதிர்க்கக்கூடிய சூழலை உருவாக்கினால் அது வேறு விடயம். அவ்வாறான சூழலில் ரணில் தப்பிப்பிழைப்பது கடினம்.

# தொலைத் தொடர்பு கோபுரத்துக்கு ஏழாலை மக்கள் கடும் எதிர்ப்பு!

## சுற்றுச் சூழல் அதிகார சபைக்கு கடிதம்

*யாழ்ப்பாணம், ஜூன் 21*

தொலைத்தொடர்பு கோபுரம் அமைக்க வேண்டாம் என்று ஏழாலை மக்கள் சுற்றுசூழல் அதிகார சபை பணிப்பாளருக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பில் சுற்றுச் சூழல் அதிகார சபைக்கு எழுதப்பட்ட கடிதத்தில்,

ஏழாலை தெற்கு புளியங்கிணற்றடி வீதியில் சன நெருக்கம் அதிகமாக உள்ள இடத்தில் தொலைத் தொடர்பு கோபுரம் அமைப்பதை நாம் விரும்பவில்லை. இந்தச் செயல்பாடானது எமது பகுதி மக்களின் விருப்பத்துக்கு மாறாக அமைக்கப் பட்டு வருகின்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றபோது அவை சமூக நலன்களை பாதிக்காதவாறு மேற் கொள்ளப்பட வேண்டும். ஒரு சமூகத்தின் இருப்பானது ஆரோக்கியமான சுகாதார வசதிகளிலேயே தங்கியுள்ளது. அப்படி இருக்கும் போது எமது பகுதி மக்களின் சுகாதார நலன்களை பாதிக்கும் வகையில் தூர நோக்கமின்றி தொலைத் தொடர்பு கோபுரம் அமைக்கப்படுகின்றமை எமது மக்கள் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதோடு மிகுந்த மன வேதனையை ஏற்படுத்துகின்றது.

இது மட்டுமின்றி பல தாக்கங்களையும் ஏற்படுத்தும். எனவே எமது கிராம மக்களின் வேண்டுகோளை ஏற்று கோபுரம் அமைக்கும் பணியை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை முன்வைக்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

# வீரமாகாளி அம்மன் ஆலயத்துக்கு பொது நிர்வாகம் அமைக்குமாறு மனு

*யாழ்ப்பாணம், ஜூன் 21*

நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயத்துக்கு பொது நிர்வாகம் ஒன்றை தெரிவு செய்து நிர்வகிக்க ஆவண செய்ய வேண்டும் என்று கோரி நல்லூர் பிரதேச செயலரிடம் மனு அளிக்கப்பட்டுள்ளது.

வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் 3 குடும்பங்களை சேர்ந்த அர்ச்சகர்கள் இடையே முரண்பாடு காணப்படுகிறது. இதனால், பெருந்திருவிழா தடைப் பட்டு, நீதிமன்ற உத்தரவிலேயே கொடியேற்றம் கடந்த 9ஆம் திகதி மாலை நடைபெற்றது.

ஆலய நிர்வாகத்தில் முரண்பாடுகள் காணப்படும் நிலையில் பொது மக்கள் வழிபாடு நடத்த இலகுவாக பொது நிர்வாகம் ஒன்றை தெரிவு செய்ய வேண்டும் என்று கோரி நல்லூர் பிரதேச செயலாளர் எழிலரசி அன்ரன் யோகநாயகத்திடம் மனு கையளிக்கப்பட்டது.

இந்த மனு தொடர்பாக மூன்று குடும்பங்களிடமும் தனித்தனியாக கருத்துப் பெறப்படவுள்ளது. ஆலய பெருந்திருவிழா நிறைவடைந்த பின்னர் இந்த விடயம் குறித்து பிரதேச செயலகம் தலையிடும் என்று அறிய வருகின்றது. (ஐ)

# வடமராட்சியில் இரத்ததான முகாம்

*வடமராட்சி, ஜூன் 21*

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தில் இன்று புதன்கிழமை காலை 9 மணி முதல் இரத்த தான முகாம் நடைபெறவுள்ளது.

இந்த இரத்த தான முகாமில் பொதுமக்கள், பொது அமைப்புகள் மற்றும் நலன் விரும்பிகள் பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-02)

# ஸ்ரீ ராம நாம கானாமிர்தம்

*யாழ்ப்பாணம், ஜூன் 21*

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் ஸ்ரீ ராம நாம கானாமிர்தம் - இசைவேள்வி 2023 நிகழ்வு எதிர்வரும் 29ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் ஜூலை 02ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் மாலை 5 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில், தமிழ்நாட்டின் பிரபல கர்நாடக சங்கீத கலைஞர்களான அபிஷேக் ரகுராம், நெய்வேலி ஆர். சந்தானகோபாலன், எஸ். சௌமியா, பத்மஸ்ரீ அருணா சாய்ராம் ஆகியோருடன் இந்திய அணி இசை கலைஞர்களும் பங்கேற்கவுள்ளனர்.

இறுதிநாளான ஜூலை 2ஆம் திகதி ஞாயிறு காலை 9.30 மணிக்கு இந்திய இசைக் கலைஞர்களும் ஈழத்தின் பிரபல இசைக் கலைஞர்களும் இணைந்து இசை ஆராதனை வழங்கவுள்ளனர். (ஐ)

# ரூபாவின் பெறுமதி வலுவடைகின்றது


*கொழும்பு, ஜூன் 21*

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாய் பெறுமதி நேற்று மேலும் அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்ட நாணய மாற்று விகிதங்களின் படி, அமெரிக்க டொலரின் கொள்வனவு விலை ரூ.297.28 ரூபாவாகவும், விற்பனை விலை 314.38 ரூபாவாகவும் பதிவாகியிருந்தது.

நேற்று முன்தினம் அமெரிக்க டொலரின் கொள்வனவு விலை ரூ.297.53 ரூபாவாகவும், விற்பனை விலை 315.12 ரூபாவாகவும் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு




**மேடம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தைரியம் கூடும் நாள்.

**இடபம்**
இதுவரை இருந்த சோர்வு, களைப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரம் சூடு பிடிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். மகிழ்ச்சியான நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். மறதியால் பிரச்னை வந்து நீங்கும். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்க வேண்டிய நாள்.

**கடகம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**சிம்மம்**
எந்த பிரச்னையையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். அரசாங்க விஷயம் நல்ல விதத்தில் முடியும். எதிர்பார்த்த லாபம் அதிகரிக்கும். சூட்சமங்களை உணர்வீர்கள். சிறப்பான நாள்.

**கன்னி**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். மதிப்புக் கூடும் நாள்.

**துலாம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். மறைமுக விமர்சனங்கள் உண்டு. நீங்கள் திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

**தனுசு**
கடினமான காரியத்தையும் எளிதாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள்.

**மகரம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உத்தியோகத்தில் தலைமைக்கு நெருக்கமாவீர்கள். அமோகமான நாள்.

**கும்பம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். புது பொறுப்புகளை ஏற்பீர்கள். கனவு நனவாகும் நாள்.

**மீனம்**
எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் வந்து போகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

# 258 இலங்கை அகதிகள் விடயத்தில் மத்திய அரசின் நிலைப்பாடு என்ன?

இராமேஸ்வரம், ஜூன் 21

பொருளாதார நெருக்கடியால் தமிழகம் வந்த 258 இலங்கை அகதிகளுக்கு கடந்த 15 மாதங்களாக புகலிட அந்தஸ்தை மத்திய அரசாங்கம் வழங்கவில்லை. இந்த நிலையில், அவர்களுக்கு சிறப்பு அகதி அந்தஸ்து வழங்க வேண்டும் என்று தமிழக அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் 1983இல் ஏற்பட்ட உள்நாட்டு போரால் தமிழர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி அகதிகளாக உலகம் முழுவதும் புலம்பெயர்ந்தனர். தமிழகத்துக்கு 3 இலட்சத்து 4 ஆயிரத்து 269 அகதிகள் வந்திருந்தனர். இதில் சுமார் 2 இலட்சத்து 12 ஆயிரம் பேர் இலங்கைக்கு திரும்பினர். தற்போதைய நிலவரப்படி தமிழகத்தில் ஒரு இலட்சத்து 2 ஆயிரம் பேர் 108 மறுவாழ்வு முகாம்களிலும் வெளியிலும் தங்கியுள்ளனர்.

அகதிகளின் குடும்பத் தலைவருக்கு ரூ. 1,500, 12 வயதுக்கு மேல் ரூ. 1000, 12 வயதுக்கு கீழ் ரூ. 500 என மாதாந்தம் உதவித் தொகை, கல்வி உதவி, வீடு, மின்சாரம், குடும்பத்துக்கு மாதம் 20 கிலோ இலவச அரிசி, மானிய விலையில் அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்படுகின்றன.

2012ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கையில் இருந்து அகதிகளாக வருவோர், கைதுசெய்யப்பட்டு வழக்குப் பதிவு செய்து சிறைகளிலும், சிறப்பு முகாம்களிலும் அடைக்கப்பட்டு வந்தனர்.

2022இல் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் அங்கிருந்து இதுவரை சுமார் 60 குடும்பங்களைச் சேர்ந்த 258 இலங்கை தமிழர்கள் அகதிகளாக தனுஷ்கோடி வந்தனர். இவர்களை கைது செய்யாமல் மனிதாபிமான அடிப்படையில் மண்டபம் முகாமில் தற்காலிகமாக தமிழக அரசு தங்க வைத்துள்ளது. மேலும் இவர்களுக்கு தங்குமிடமும் 3 வேளை உணவு மட்டுமே வழங்கப்படுகிறது.

பொருளாதார நெருக்கடியால் அகதிகளாக வந்துள்ளவர்களை எப்படிக் கருதலாம் என்பது குறித்த மத்திய அரசின் முடிவுக்காக கடந்த 15 மாதங்களாக தமிழக அரசு காத்திருக்கிறது. ஏற்கெனவே தமிழக முகாம்களில் வசிப்போருக்கு வழங்கப்படும் சலுகைகளை போன்று, 258 பேருக்கும் புகலிடம் வழங்குவதற்கான சிறப்பு ஏற்பாடுகளை வழங்க அனுமதிக்க வேண்டும் என தமிழக அரசு கோரிக்கை வைத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# சீமான் உட்பட 75 பேர்மீது பொலிஸார் வழக்கு பதிவு

தென்காசி, ஜூன் 21

தனியார் கல்குவாரிக்குள் அத்துமீறி புகுந்து ஊழியரைத் தாக்கினார் என்று சீமான் உட்பட 75 பேர் மீது சங்கரன்கோவில் பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

நிகழ்வு ஒன்றில் பங்கேற்க சென்ற சீமானிடம், அப்பகுதி மக்கள் கல் குவாரியால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து தெரிவித்தனர்.

இதையடுத்து சீமானும் அவரின் கட்சியினரும் கல் குவாரிக்கு சென்றனர். அது மூடப்பட்டிருந்த நிலையில் அவர்கள் உள்ளே சென்றனர். அவர்களை தடுக்க முனைந்த காவலாளியையும் தாக்கினர் என்று கூறப்படுகின்றது.

இந்த விடயம் குறித்து கல் குவாரி நிர்வாகம் கொடுத்த முறைப்பாட்டின் அடிப்படையில் சீமான் உட்பட 75 பேர் மீது 4 பிரிவுகளில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

(ஐ)

# ஆளுநரை நீக்கக் கோரிய போராட்டம் நேற்று ஆரம்பம்!

## முதல் ஒப்பத்தை நல்லகண்ணு வைத்தார்

சென்னை, ஜூன் 21

தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவியை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி ம. தி. மு. க. சார்பில் கையெழுத்து இயக்கத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணு நேற்று தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு ஆளுநர் பொறுப்பிலிருந்து ஆர். என். ரவியை நீக்க குடியரசுத் தலைவரை வலியுறுத்தி ம. தி. மு. க. சார்பில் நேற்று முதல் அடுத்த மாதம் 20 ஆம் திகதி பொதுமக்களிடம் கையெழுத்து பெறும் இயக்கம் ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வில் பேசிய நல்லகண்ணு, "சமத்துவம், சகோதரத்துவம் என்ற முறையில் அம்பேத்கர் அரசியல் சட்டத்தை கொண்டு வந்துள்ளார். அதற்கு மாறாக மக்களுக்கு பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்ற கருத்துக்கு மாறாக இந்திய நாடு மதசார்பற்ற நாடு என்பதற்கு மாறாக ஆளுநர் தனி பொறுப்பு தனி ஆதிக்கம் செல்வாக்கை கொண்டு நெருக்கடி கொடுக்கும் அவரை பதவியில் இருந்து நீக்க இந்த கையெழுத்து இயக்கம்.

ஜனநாயக சக்தியை இணைத்து செயல்பட வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்து வைகோ இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இந்த முயற்சியை ஆதரிக்கும் வகையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் முதல் கையெழுத்து போட்டுள்ளேன். இது நிச்சயம் கோடி அல்ல பல கோடி மக்களை சென்று சேர வேண்டும்." எனத் தெரிவித்தார்.

# சாலை வரியை உயர்த்தும் முடிவை தமிழ்நாடு அரசு கைவிட வேண்டும்

## அ. தி. மு. க. கட்சி வலியுறுத்து

சாலை வரியை உயர்த்தும் முடிவை தமிழ்நாடு அரசு கைவிட வேண்டும் என்று அ. தி. மு. க. பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்,

'விடியல் தருவோம்' என்று கூறி ஆட்சியைப் பிடித்த தி. மு. க. அரசு சாலை வரியை 5 சதவீதம் அளவிற்கு உயர்த்துவதற்கு முடிவெடுத்துள்ளதாக அனைத்து நாளிதழ்களிலும் வெளிவந்துள்ள செய்தி, ஏற்கெனவே தமிழக மக்களின் வயிற்றில் எரிந்து கொண்டிருக்கும் தீயில், எண்ணெய் வார்த்ததைப்போல் உள்ளது. இந்த தி. மு. க. அரசு மீண்டும் வாகனங்களுக்கான சாலை வரியை 5 சதவீதம் அளவுக்கு உயர்த்த முடிவெடுத்திருப்பது தமிழக மக்களிடையே கடும் எதிர்ப்பை உண்டாக்கி இருக்கிறது.

தி. மு. க. அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு அனைத்து வரிகளும் உயர்த்தப்பட்டுள்ளன. இந்தச் சூழ்நிலையில் 5 சதவீதம் சாலை வரியை உயர்த்துவதற்கு முடிவெடுத்திருக்கும் தி. மு. க. அரசு, மக்கள் நலன் கருதி இதனை உடனடியாகக் கைவிட வேண்டும் - என்றுள்ளது.

(ஐ)

# நாட்டில் இரத்தக்களரி ஏற்பட மதத் தலைவர்களே காரணம்

## சிறிதரன் எம்.பி. குற்றச்சாட்டு



**கிளிநொச்சி, ஜுன் 21**

**நாட்டில் இரத்தக்களரி ஏற்படுவதற்கு மதத் தலைவர்களே காரணம் என தமிழரசுக் கட்சி யின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்- குருந்தூர் மலை காணி விகாரைக்குரியதும் சிங்கள மக்களுக்குரியதும் என பல வரலாற்று ஆய்வுகள் சொல்கின்றன என்று தொல்லியல் திணைக்களத்தின் ஆய்வாளர் கலாநிதி எல்லாவல தேரர் குறிப்பிட்டிருந்தார்.

அங்கே தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள் என்ற வரலாற்றை இவர் போன்ற தேரர்கள் படிக்க வேண்டும்.

பூர்வீகமாக பஞ்ச ஈச்சரங்களை கொண்டு தமிழர்கள் வாழ்ந்தார்கள்.

பிரபாகரனின் கொள்கைகளை தமிழகக் கட்சிகள் பின்பற்றுவதாக எல்லாவல மேதானந்த தேரர் குறிப்பிடுகின்றார்.

இவர் போன்றோர் சிங்கள மக்களை நரகத்திற்கு கொண்டு செல்லும் கரும வினைகளைச் செய்கின்றனர்.

இந்த நாட்டில் இரத்தக்களரி ஏற்படுத்துவதற்கும் மதத்தலைவர்கள் தான் காரணம்-என்றார்.

# கோழி இறைச்சி, முட்டை விலை விரைவில் மாற்றம்

கொழும்பு, ஜுன் 21

கோழி இறைச்சி மற்றும் முட்டையின் விலையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று அகில இலங்கை முட்டை வர்த்தக சங்கத்தின் தலைவர் அன்ரன் நிஷாந்த அப்புஹாமி தெரிவித்தார்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட அவர்,

ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சியை 900 ரூபாவுக்கும், முட்டை ஒன்றை 35 ரூபாவுக்கும் விற்பனை செய்ய முடியும்.

உற்பத்தியாளர்கள் முட்டை மற்றும் கோழி இறைச்சி என்பனவற்றை அதிக இலாபத்துடன் சந்தைக்கு வழங்குகின்றனர்-என்றார்.

இந்த நிலையில், அதிகரித்து வரும் கோழி இறைச்சி விலையை கட்டுப்படுத்துவதற்காக விடயத்துடன் தொடர்புடைய தரப்பினருடன் கலந்துரையாடப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அத்தோடு, முட்டை உற்பத்தியை அதிகரிப்பதற்காக நாடளாவிய ரீதியில் கோழிக் குஞ்சுகளை வழங்குவதற்கான வேலைத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)

# யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 21

யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி யாழ்ப்பாண பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்

முகப்புத்தகத்தில் விடயம் ஒன்றைப் பதிவிட்ட ஒருவரை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் எதிர்வரும் 22 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு யாழ்ப்பாண மனித உரிமைகள் ஆணைக்குழுவில் விசாரணைக்குச் சமூகமளிக்குமாறு மனித உரிமை ஆணைக்குழுவினால் அவருக்கு அழைப்புக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ)

# சுற்றுலாப் பயணிகளின் வருகையில் அதிகரிப்பு!

கொழும்பு, ஜுன் 21

ஜுன் மாதத்தின் முதல் 18 நாட்களில் மட்டும் 50 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்ட சமீபத்திய தரவுகளின்படி, ஜுன் மாதத்தில் இதுவரையான காலப் பகுதியில் 52,663 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜுன் மாதத்தில், இந்தியாவில் இருந்தே அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, ஜுன் மாதத்தில் இதுவரை மொத்தம் 15,406 இந்தியர்கள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

மேலும், ரஷ்யாவிலிருந்து 4,748 சுற்றுலாப் பயணிகளும், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 3,905 பேரும், சீனாவிலிருந்து 2,823 பேரும், அவுஸ்திரேலியாவிலிருந்து 2,688 பேரும், கனடாவிலிருந்து 2,503 சுற்றுலாப் பயணிகளும் இந்த மாதத்தில் நாட்டுக்கு வந்துள்ளனர்.

மே மாதத்தில் மொத்தம் 83,309 சுற்றுலாப் பயணிகள் வந்ததாகவும் இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 577,149 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்றும் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

# இராணுவச் சிப்பாய்கள் பயணித்த வான் விபத்து!




கொழும்பு, ஜுன் 21

இராணுவ சிப்பாய்களை ஏற்றிச்சென்ற சிறிய வகை வான் ஒன்று விபத்திற்குள்ளகியுள்ளது.

கொழும்பிலிருந்து கண்டி நோக்கி இராணுவச் சிப்பாய்களை ஏற்றிச் சென்ற வான் எதிர்த்திசையில் இருந்து வந்த பவுசருடன் மோதி இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று அதிகாலை கொழும்பு-கண்டி வீதியின் நிட்டம்புவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரதவடுன்ன பகுதியில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த வானில் 6 இராணுவ அதிகாரிகள் இருந்தனர். அவர்களில் 5 பேர் காயமடைந்து வதுப்பிட்டிவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். மேலதிக சிகிச்சைக்காக ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பொல்ஹேன்கொட இராணுவ முகாமின் அதிகாரிகள் குழுவொன்று கடமைக்காக கிரித்தலை முகாமிற்குச் சென்று கொண்டிருந்தபோது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பவுசர் சாரதியின் கவனக் குறைவால் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. (அ)

# மயக்க மருந்து வழங்கப்பட்ட 2 1/2 வயது குழந்தை மரணம்!

கொழும்பு, ஜுன் 21

மயக்க மருந்து வழங்கப்பட்ட இரண்டரை வயது குழந்தை ஒன்று பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் பேராதனை சிறுவர் வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது.

காலில் ஏற்பட்ட காயம் காரணமாக பேராதனை சிறுவர் வைத்தியசாலையில் குறித்த குழந்தை அனுமதிக்கப்பட்டது.

இதன்போது சத்திர சிகிச்சைக்காக மயக்க மருந்தை உட்செலுத்த வேண்டும் என்று வைத்தியர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

இதற்கமைய உட்செலுத்தப்பட்ட மயக்க மருந்து காரணமாக குழந்தை உயிரிழந்துள்ளது.

இதனை வைத்தியசாலையின் வைத்தியர்கள் உறுதிப்படுத்தியதாக குறித்த குழந்தையின் தந்தை ஊடகங்களிடம் தெரிவித்தார்.

சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்காக மயக்க மருந்து கொடுக்கப்பட்டது எனவும், இதனால் குழந்தை உயிரிழந்தது எனவும் குழந்தையின் தந்தை குறிப்பிட்டார்.

இதேவேளை, முன்னதாக இரண்டு தடவைகள் பேராதனை போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இரு பெண்கள் மயக்கமடைவதற்காக வழங்கப்பட்ட மருந்தால் உயிரிழந்துள்ளனர்.

மகப்பேற்றுக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பெண்ணொருவரும் மற்றுமொரு பெண்ணும் இவ்வாறு உயிரிழந்தனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படும் மருந்துகளை உரிய முறையில் ஒழுங்குபடுத்த வேண்டும் என்று அரச மருந்தாளர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

# மொட்டு கட்சி இல்லாது எந்தவொரு சக்தியாலும் வெற்றி பெற முடியாது

## ரஞ்சித் பண்டார எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 21

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சி இல்லாமல் எந்தவொரு கூட்டணியாலும் தேர்தலில் வெற்றிபெறமுடியாது - என்று அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த ஒருவரே ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கப்படுவார். தேவையேற்படின் கட்சிகள் எம்முடன் இணைந்து கூட்டணி அமைக்கலாம் எனவும் அவர் கூறினார்.

அதேவேளை, அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவையே களமிறக்கவேண்டும் என மொட்டு கட்சிக்குள் ஒரு தரப்பினர் வலியுறுத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# விதிகளை அமுல்படுத்துவதோடு நிறுத்தாமல் அவற்றை நடைமுறைப்படுத்தவும் வேண்டும்

## சபையில் நிரோஷன் பெரேரா கோரிக்கை

கொழும்பு, ஜுன் 21

விதிகளை அமுல்படுத்துவதோடு நிறுத்தாமல் அதனை நடைமுறைப்படுத்துவது அவசியம் என புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா தெரிவித்தார்.

பாராளுமன்ற வரவு-செலவுத் திட்ட அலுவலக சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையில் பல்வேறு ஆணைக்குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டபோதிலும் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு நியமிக்கப்பட்ட சில அதிகாரிகள் சுயாதீனமாக நடந்து கொள்ளவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சுயாதீன ஆணைக்குழு சபைப் பலகைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக வும் நிரோஷன் பெரேரா தெரிவித்தார்.

அந்தவகையிலேயே வரவு-செலவுத் திட்ட அலுவலகத்தின் கருத்துரு நல்லதாக இருந்தாலும், எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படுமா என்ற சந்தேகம் நிலவுவதாகவும் அவர் கூறினார். (அ)

# கடன் மறுசீரமைப்பு குறித்து இன்னும் இறுதி முடிவில்லை



## கூறுகிறார் ஷெஹான் சேமசிங்க

கொழும்பு, ஜூன் 21

**உள்நாட்டு கடனை மறுசீரமைக்கும் வேலைத்திட்டம் தொடர்பாக நாட்டில் பல்வேறு தரப்பினர் தவறான தகவல்களை பரப்பி வருகின்றபோதிலும் அது குறித்து அரசாங்கம் இன்னும் இறுதித் தீர்மானம் எடுக்கவில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.**

'ஸ்திரமான நாட்டுக்கு, அனைவரும் ஒரு வழிக்கு' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையம் ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தது.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவுக்கும்போதே நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- உள்நாட்டு கடன் மறுசீரமைப்புத் திட்டம் குறித்து இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. ஆனால், நாட்டின் முக்கியமான பிரச்னைகளில் அரசாங்கம் எப்போதும் பொறுப்புடன் செயல்பட்டு வருகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பாராளுமன்றத்தில் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பாக கருத்து வெளியிட்டிருந்தார்.

நம் நாட்டின் வங்கிக்கட்டமைப்பு, நிதிக்கட்டமைப்பில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தாத மற்றும் ஸ்திரத்தன்மையை பராமரிக்க அவசியமான மறுசீரமைப்புக்கு உகந்த தீர்வுகளை அனைவரும் தேடுகின்றனர்.

இது தொடர்பாக, நாடு முழுவதும் பல்வேறு தகவல்கள் மற்றும் அறிவிப்புகள் வெளியாகி வருகின்றன.

இது குறித்து அரசாங்கம் இறுதித் தீர்மானம் எடுத்தவுடன், பாராளுமன்றத்துக்கும் பொதுமக்களுக்கும் அறிவிக்கத் தயாராக உள்ளது.

இது மிகவும் உணர்வுபூர்வமானதொரு விடயமாகும். இது சந்தை நிலைமையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

எனவே, இந்த மறுசீரமைப்பு தொடர்பாக சந்தேகங்களை எழுப்பும் அறிக்கைகளை வெளியிடாமல் இருந்தால் தான், நமது நிதிச் சந்தையின் ஸ்திரத்தன்மையை நாம் தொடர்ந்து பராமரிக்க முடியும்.

ஜனாதிபதியின் பிரான்ஸ் விஜயத்தின் பின்னர் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக சிறந்த புரிதல் ஏற்படும்.

எதிர்மறை 7.8 ஆக இருந்த பொருளாதார வளர்ச்சி விகிதம் இந்த ஆண்டின் இறுதியில் எதிர்மறை 3 ஆக இருக்கும் என்று சர்வதேச நாணய நிதியம் கணித்துள்ளது.

ஆனால், அரசாங்கம் முன்னெடுத்து வரும் இந்த வேலைத் திட்டத்தின் மூலம் அதனை விடவும் சிறப்பான முன்னேற்றத்தை அடைய முடியும் என்ற பெரும் நம்பிக்கை உள்ளது-என்றார்.

(அ)

# விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு நேற்று ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 21

விவசாயிகளிடமிருந்து சாதாரண நெல் கொள்வனவு இன்று (நேற்று) தொடக்கம் ஆரம்பிக்கப்படும் என விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- நெல் விவசாயிகளுக்கு நிர்ணய விலை இல்லை என நான் எல்லா இடங்களிலும் கூறுகின்றேன்.

விவசாயிகளுக்கு அதிக நீதி கிடைக்கவேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.அமைச்சரவையிலும் விவாதித்தேன்.

அதற்காக பல அமைச்சரவைப் பத்திரங்களை சமர்ப்பித்துள்ளேன். இம்முறை நெல்லை கொள்வனவு செய்தது விவசாய அமைச்சோ அல்லது நெல் சந்தைப்படுத்தல் சபையோ அல்ல.

இம்முறை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் நெல்லை அரசு கொள்முதல் செய்து உணவுப் பற்றாக்குறையால் அவதிப்படும் மக்களுக்கு இலவசமாக வழங்கியது.

சீன உரங்களை இலங்கைக்கு கொண்டு வருவது குறித்து முழுமையான அறிக்கையை தயாரித்து வருகிறோம்.

நாங்கள் எதையும் மறைக்கவில்லை. நாங்கள் யாரையும் பாதுகாக்க முயற்சிக்கவில்லை.

இது தொடர்பாக பெறப்பட்ட தகவல்களை கோப் குழு மூலம் முன்வைப்போம்.

மலத்தை உரம் என்று சொல்லி நாள் முழுவதும் உரம் பற்றி பேச வேண்டியதில்லை.

ஒன்றும் மறைக்கப்படவில்லை. இது தொடர்பான முழுமையான அறிக்கை எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

நீங்கள் ஹம்பாந்தோட்டையில் இருந்தீர்கள். அரிசி 220 ரூபாவுக்கு விற்கப்படுகிறது என்று சொன்னீர்கள். நீங்கள் சமீபத்தில் கடைக்கு வரவில்லை என்று நினைக்கிறேன். லுனுகம் வெஹர பகுதியில் 125 ரூபாவாக பதிவாகியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் பணியாற்றிய அனைவரும் சந்தைக்குச் சென்றனர். சென்று விலைகளைக் கண்டறியவும். நீங்களும் செல்லுங்கள். இங்கே யாரும் சொல்வதைச் சொல்லாதீர்கள். பாஸ்மதி கீரிச் சம்பாவை பற்றி யோசித்து பேசாதீர்கள்.

இந்த நாட்டில் பெரும்பான்மையான மக்கள் நாடு மற்றும் கெக்குலு அரிசியை உண்கின்றனர். அதுவும் 200 ரூபாவுக்கு மேல் விற்கவில்லை.

எம்.ஓ.பி உரங்களுக்கு தட்டுப்பாடு இல்லை. யாராவது கொடுக்கவில்லை என்றால் அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பேன்.

பொலனறுவையில் யூரியாவில் சிறிய பிரச்னை ஏற்பட்டது. நாடு முழுவதும் யூரியா வேலைத் திட்டம் ஒழுங்காக செல்கிறது. மண் உரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

தேவைக்கு அதிகமாக எம்.ஓ.பி உரம் உள்ளது. சில அதிகாரிகள் அரசை தர்மசங்கடத்தில் ஆழ்த்துவதற்காக உரத் தட்டுப்பாடுகளை உருவாக்குகின்றனர். அத்தகைய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார்.

(அ)

# யாழில் மருத்துவர்கள் வீட்டில் பெற்றோல் குண்டுத் தாக்குதல்!



யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாணத்தில் ஓய்வு பெற்ற வைத்தியத் தம்பதி வசித்த வீட்டின் மீது பெற்றோல் குண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கந்தர்மடம், மணற்தரைவீதியிலுள்ள வீடொன்றின் மீதே நேற்று முன் தினம் இரவு 10.30 மணியளவில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்ற 3 பேர் வீட்டின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதலை நடத்திய பின்னர், வீட்டுக்குள் நுழைந்து சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்துள்ளனர்.

அந்த வீட்டில் வசித்த தம்பதியினர் ஓய்வு பெற்ற மருத்தவர்கள்.

காணிப்பிணக்கு ஒன்றின் எதிரொலியாக இந்த தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாமா என்று சந்தேகிக்கப்படுகிறது.

(அ)

# கோட்டா வழங்கிய முத்துராஜாவை எங்களால் பொறுப்பேற்கமுடியாது!



## சபையில் கூறினார் அமைச்சர் பவித்ரா

கொழும்பு, ஜூன் 21

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் அளுத்கம கந்த பௌத்த விகாரைக்கு முத்துராஜா என்ற யானை வழங்கப்பட்டதால் வனஜீவராசிகள் திணைக்களம் அதனை பொறுப்பேற்க முடியாது என வனவிலங்குகள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி சபையில் நேற்று சுட்டிக்காட்டினார்.

இன்று முத்துராஜா என்ற யானையை மீளவும் தாய்லாந்துக்கு கொண்டு செல்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றிருந்தன.

இதன்போது சபையில் முன்வைக்கப்பட்டிருந்த கேள்விகளுக்கு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

தாய்லாந்து நாட்டினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட முத்துராஜா என்ற யானை, முன்னாள் ஜனாதிபதியால் அளுத்கமகந்த விகாரைக்கு புண்ணிய நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ளது.

விகாரைக்கு வழங்கப்பட்டதன் பின்னர் வனஜீவராசிகள் திணைக்களம் பொறுப்பேற்க முடியாது.

விகாரைக்கு புண்ணிய நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட இந்த உடலியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளதாக விலங்கின நலன்பேண் அமைப்புக்கள் முறைப்பாடளித்ததை தொடர்ந்து இந்த யானை, தெஹிவளை தேசிய மிருகக்காட்சிச்சாலைக்கு விகாரையின் அனுமதியுடன் கொண்டு செல்லப்பட்டது. தற்போது யானைக்கு சிகிச்சையளிக்கப்படுகிறது.

இந்த யானை விவகாரம் தொடர்பில் கொழும்பில் உள்ள தாய்லாந்து தூதரகத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம். இருப்பினும் இந்த யானையை தாய்லாந்துக்கு கொண்டு செல்லும் உறுதியான நிலைப்பாட்டில் தாய்லாந்து அரசாங்கம் உள்ளது-என்றார்.

(அ)

# நாட்டை வங்குரோத்துக்குள் தள்ளிவிட்டு ஊர் ஊராக சபதம் பாடும் ராஜபக்ஷர்கள்!

## எரான் விக்கிரமரத்ன காட்டம்

கொழும்பு, ஜூன் 21

**நாட்டை வங்கிரோத்து நிலைக்கு கொண்டு சென்று விட்டு ராஜபக்ஷர்கள் இன்றி ஊரூராக இலங்கையை மீண்டும் கட்டியெழுப்ப போவதாக சபதம் எடுக்கின்றார்கள் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.**

பாராளுமன்றில் நேற்று கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- கடந்த காலங்கள் நாடு அதலபாதாளத்துக்கு சென்றமைக்கு காரணம் ராஜபக்ஷ குடும்பத்தினர். இவர்களுக்கு சார்பாகவும் ஒரு குழு இருக்கின்றது.

அரசுக்கு எதிரான போராட்டத்தின்போது போர வாவியில் குளித்துவிட்டு மாளிகையில் மறைந்திருந்தவர்கள் இவ்வாறு கிராமங்களுக்குச் செல்ல முடியும்.

அவ்வாறு கிராமங்களுக்கு சென்று ரணில் விக்கிரமசிங்கவை முன்னிலைப்படுத்திக்கொண்டு நாணய நிதியத்துக்கு மறைந்து கொண்டு , இனவாத மதவாதத்தை பரப்பிக்கொண்டு தேசிய பாதுகாப்பு பற்றி பேசுகின்றனர்.

இந்நிலையில் மகிந்தவின் பதாதைகளை ஏந்திக்கொண்டு இன்று அமைச்சுப் பதவிகளை வேண்டுகின்றனர். 2022 ஆம் ஆண்டு இந்த நாடு பாரிய இன்னல்களை சந்தித்தது-என்றார்.

# முல்லைத்தீவில் தடுத்து வைத்து சித்திரவதை செய்யப்பட்ட நபர்

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

முல்லைத்தீவு, ஜூன் 21

முல்லைத்தீவில் வசிக்கும் பொதுமகன் ஒருவர் தாம் கடந்த வாரம், இலங்கை வனவிலங்கு திணைக்கள அதிகாரிகளால் சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதாக வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இலங்கை வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் நான்கு விசேட அதிரடிப்படை அதிகாரிகள் ஜூன் 14 ஆம் திகதி, வேட்டை இறைச்சி வைத்திருந்ததாக சந்தேகத்தின் பேரில் தமது வீட்டுக்குள் வலுக்கட்டாயமாக நுழைந்ததாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதன் பின்னர் தாம் வனஜீவராசிகள் திணைக்கள அலுவலகத்தில் சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதாக அவர் தமது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தமது விசாரணைக்கு இடையூறு விளைவித்ததாகவும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளை தாக்கியதாகவும் குற்றஞ்சாட்டி அவர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட பின்னரே அவர், வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்து தற்போது காயங்களுக்கு மருத்துவ சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தநிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பாதிக்கப்பட்டவர் மற்றும் அவரது குடும்பத்தினரை சந்தித்து விவரங்களை கேட்டறிந்து கொண்டார்.

(அ)

# பெற்றோரின் சித்திரவதையில் இருந்து தப்பிச்சென்று பசியால் வாடிய சிறுவன்!

கொழும்பு, ஜூன் 21

பெற்றோரின் சித்திரவதைக் காரணமாக வீட்டிலிருந்து வெளியேறிதாக கூறப்படும் 15 வயது சிறுவன் நேற்று முன்தினம் அதிகாலை ஹற்றன் ரயில் நிலையத்தில் இருந்து பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டார்.

அவர் பதுளை நோக்கி பயணித்த இரவு அஞ்சல் ரயிலில் ஏறி ஹற்றனில் இறங்கியுள்ளார்.

பெற்றோர்கள் தன்னை கடுமையாக தாக்கியதாகவும், அடிக்கடி துன்புறுத்தியதாகவும், அவர்களின் சித்திரவதையில் இருந்து தப்பிப்பதற்காக வீட்டை விட்டு வெளியேறியதாகவும் குறித்த சிறுவன் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

தமக்கு ஒரு சகோதரனும் மூத்த சகோதரியும் இருப்பதாகவும் அவர்கள் அனுராதபுரத்தில் வசித்து வருவதாகவும் அந்த சிறுவன் வாக்குமூலம் அளித்துள்ளார்.

அனுராதபுரம் ரயில் நிலையத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் செல்லும் ரயிலில் ஏறி, பாணந்துறையில் உள்ள தமது பாட்டியின் வீட்டுக்குச் செல்வதற்காக பயணித்த அவர், கவனக்குறைவாக, கொழும்பில் இருந்து பதுளை தொடருந்தில் ஏறியுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

அத்துடன் குறித்த சிறுவனை கண்டறியும் நேரம் வரை ஒரு வேளை உணவினை மாத்திரமே உட்கொண்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# பேராதனை வைத்தியசாலையில் சிறார்கள் மயக்க மருந்து ஊசியினால் உயிரிழந்தனரா?

## சஜித் பிரேமதாஸ நேற்று சபையில் கேள்வி

கொழும்பு, ஜூன் 21

பேராதனை வைத்தியசாலையில் செலுத்தப்பட்ட மயக்க ஊசி காரணமாக பல சிறுவர்கள் உயிரிழந்துள்ளதாகவும், இந்த ஊசிகள் அகற்றப்படுவதாக கூறப்பட்டாலும், அவை தொடர்ந்தும் பயன்படுத்தப்படுவதாக தகவல்கள் வெளியாகி வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பிரதமரிடம் கேள்வி எழுப்பிய போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பேராதனை வைத்தியசாலையில் மயக்க ஊசி மூலம் விசம் கலந்து இரண்டு சிறுவர்கள் உயிரிழந்துள்ளதாகவும், இதற்கு முன்பும் பல உயிரிழப்புகள் நடந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நச்சுத் தடுப்பூசிகள் அகற்றப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவை இன்னும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பதுதான் செய்தி.இதை பிரதமர் ஆராய்ந்து தெளிவான பதில் அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்-என்றார்.

(அ)

# இவ்வருடத்தில் மட்டும் 34 துப்பாக்கிச் சூடுகள்!

கொழும்பு, ஜூன் 21

இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் நாட்டில் மொத்தம் 34 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

ஜனவரி மாதம் முதல் நேற்று வரை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 20 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 13 பேர் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

2022 ஆம் ஆண்டில் மொத்தம் 60 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ குறிப்பிட்டார்.

இதில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளின் தொடர்பு மற்றும் பிற காரணங்களும் உள்ளடங்கும்.

2022ஆம் ஆண்டு பதிவாகிய 559 கொலைகளில் 493 சம்பவங்களுக்கு தீர்வு காணவும், சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களை கைது செய்யவும் பொலிஸாரால் முடிந்ததாக அவர் கூறினார்.

இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் நேற்று வரை 225 கொலைகள் பதிவாகியுள்ளதாகவும், அதில் 34 கொலைகள் போதைப் பொருள் கடத்தல் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுடன் தொடர்புடையவை என்றும், சில தனிப்பட்ட தகராறுகள் மற்றும் திருமணத்திற்குப் புறம்பான உறவுகளுடன் தொடர்புடையவை என்றும் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டில் இது வரை பதிவாகிய 225 கொலைகளில் 223 சம்பவங்களைத் தீர்த்து, சந்தேக நபர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்ய பொலிஸாரால் முடிந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், 2023 இல் பதிவான துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் கடந்த வருடத்தைவிட குறைவாகவே காணப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

(அ)

# போதைப்பொருள் கடத்தல்காரரை கைது செய்ய தேடுதல் நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 21

போதைப்பொருள் கடத்தல் காரர்கள் மற்றும் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகளை கைது செய்வதற்கான விசேட தேடுதல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் இந்த விசேட திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் குறிப்பிட்டார்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 255 பேர் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த காலப்பகுதியில் 34 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்தூவ குறிப்பிட்டார்.

இதில் திட்டமிட்ட குற்றச் செயல்கள் மற்றும் ஏனைய சம்பவங்களும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் 60 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகியிருந்ததாக பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையில், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் கொலைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

# முல்லைத்தீவு பொலிஸாரின் ஏற்பாட்டில் குருதிக்கொடை

முல்லைத்தீவு, ஜூன் 21

முல்லைத்தீவு மாவட்ட பொலீஸ் திணைக்களங்களின் ஏற்பாட்டில் குருதிக்கொடை வழங்கும் நிகழ்வு நேற்று முள்ளியவளை பொலீஸ் நிலையத்தில் முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பொலீஸ் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் ஆகியோர் இதில் குருதி தானம் செய்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, கருநாட்டுக்கேணி, மாங்குளம், ஒட்டுசுட்டான், ஐயன்கன்குளம், நெட்டாங்கண்டல், ஆகிய பொலீஸ் நிலையங்களை உள்ளடக்கிய 120 வரையான பொலீஸ் உத்தியோகத்தர்கள் குருதிக்கொடை வழங்கினர்.

முல்லைத்தீவு மாவட்ட பொலீஸ் உயர் அதிகாரிகளுடன் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையின் வைத்தியர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோர் குருதிக்கொடை நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)



# அரபு நாடுகளில் சீனாவின் ஆதிக்கம் அதிகரிப்பதால் இந்தியாவுக்கு பாதிப்பா?

சுபம் கிஷோர்



அமெரிக்காவுக்கு நிகராக வளரத் துடிக்கும் சீனா உலகின் அனைத்துப் பகுதிகளிலும் தனது தடத்தைப் பதித்து வருகிறது. இந்தியாவுக்கு நெருக்கமாக இருக்கும் இஸ்லாமிய நாடுகளிலும் அதன் செல்வாக்கு பெருகி வருகிறது. இது இந்தியாவுக்கு எந்த வகையில் நெருக்கடியை ஏற்படுத்தும்?

சவூதி அரேபியா மற்றும் ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் 7 ஆண்டுகளில் முதன்முறையாக கடந்த ஏப்ரல் 6ஆம் தேதி சந்தித்துகொண்டனர்.

அதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு, இவ்விரு நாடுகளையும் சேர்ந்த தேசிய பாதுகாப்பு ஆலோசகர்களும் பல ஆண்டு பகைமையை மறந்து மீண்டும் தங்களுக்கு தூதரக உறவுகளை புதுப்பித்துக்கொண்டனர். இது உலக நாடுகளின் புருவங்களை உயரச் செய்தது.

இந்த சமாதானத்திற்கு பின்னணியில் சீனா உள்ளது. இந்த இரு நாடுகளுக்கு இடையேயான சந்திப்புகள் சீனாவால் நடத்தப்பட்டு மத்தியஸ்தம் செய்யப்பட்டன.

இதனுடன் சேர்த்து மத்திய கிழக்கு நாடுகளில் அதிகரித்துவரும் சீனாவின் போக்கு குறித்த விவாதங்கள் தொடங்கி தற்போதும் தொடர்ந்து வருகின்றன.

**சீனாவில் பாலத்தீன தலைவர்**

சவூதி அரேபியா- ஈரானை தொடர்ந்து தற்போது இஸ்ரேல் மற்றும் பாலத்தீனத்துக்கு இடையேயான பிரச்னைக்கு தீர்வு காணும் முயற்சியை சீனா தொடங்கியுள்ளது.

வியாழனன்று, சீனப் பிரதமர் லீ கெகியாங், பாலத்தீன தலைவர் முகமது அப்பாஸைச் சந்தித்தார்.

முகமது அப்பாஸை "சீனாவின் பழைய நண்பர்" என்று விவரித்த லீ , அவர் 'சீனா-பாலத்தீன உறவுகளின் வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பைச் செய்துள்ளார்." என்றும் குறிப்பிட்டார்.

முன்னதாக புதன்கிழமை, சீன அதிபர் ஷி ஜின்பிங் பெய்ஜிங்கில் முகமது அப்பாஸை சந்தித்து பேசியபோது, இரு தலைவர்களும் தங்களுக்கு இடையே ஒரு ராஜ்ய ரீதியிலான கூட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

சீன அரசு ஊடகங்களின்படி, அப்பாஸுடனான தனது சந்திப்பின் தொடக்கக் கருத்துகளில், "பாலத்தீனியர்கள் தங்கள் நியாயமான தேசிய உரிமைகளை மீட்டெடுப்பதற்கான நியாயமான காரணத்தை" சீனா ஆதரிப்பதாகவும், பாலத்தீனம் உள் நல்லிணக்கத்தை அடைய சீனா உதவும் என்றும், அமைதியை மேம்படுத்த உதவுவதில் பங்கு வகிக்கத் தயாராக இருப்பதாகவும் ஷி ஜின்பிங் குறிப்பிட்டார்.

முன்னதாக, சீனாவில் அப்பாஸுக்கு முழு ராணுவ மரியாதையுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது. இரு தரப்பினரும் ஒரு 'ராஜ்ய ஒப்பந்தம்" பற்றி பேசினர்.

**சவூதி அரேபியாவுடன் சிறந்த உறவு**

மார்ச் மாதத்தில், சௌதி அரேபியாவின் எண்ணெய் நிறுவனமான சௌதி அராம்கோ சீனாவில் பல பில்லியன் டாலர் முதலீட்டை அதிகரிப்பது மற்றும் சீனாவுக்கு கச்சா எண்ணெய் வழங்குவது தொடர்பான இரண்டு முக்கிய ஒப்பந்தங்களை அறிவித்தது. டிசம்பரில், சீன அதிபர் ஷி ஜின்பிங் சீன நாணயமான யவானில் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் குறித்து பேசினார்.

சீனாவுடன் நாங்கள் ஒத்துழைப்பை விரும்புகிறோம், போட்டியை அல்ல என்று சௌதி தெரிவித்துள்ளது. அந்நாட்டின் எரிசக்தி அமைச்சர் மேற்கத்திய சந்தேகங்களை தான் புறக்கணித்துவிட்டதாக குறிப்பிட்டதாக செய்தி முகமையான ராய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது.

உலகின் முன்னணி எண்ணெய் ஏற்றுமதியாளராக சவூதி உள்ளது, மறுபுறம் உலகின் மிகப்பெரிய எரிசக்தி நுகர்வோராக சீனா உள்ளது. இந்த இருநாடுகளுக்கும் இடையேயான இருதரப்பு உறவுகள் ஹைட்ரோகார்பனை அடிப்படையாகக் கொண்டவை. அரசியல் உறவுகள் சூடு பிடித்து வருவதற்கு மத்தியில் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பத் துறையில் சவூதி அரேபியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான ஒத்துழைப்பும் ஆழமடைந்துள்ளது.

**சீனா தனது வழியை மாற்றி வருகிறது**

சீனாவின் ஆதிக்கம் இதுவரை பொருளாதார துறையில் உள்ளது. பல நாடுகளுடன் சீனா வர்த்தகம் செய்து வருவதோடு பல நாடுகளில் முதலீடும் செய்துள்ளது. மிகப் பெரிய பொருளாதாரமாகவும் உருவெடுத்துள்ளது.

இந்நிலையில், தற்போது சீனா தன்னை பற்றிய பிம்பத்தை மாற்ற முயற்சிப்பதாக ஐ.சி.டபிள்யூ.ஏ. மருத்துவர் பஸ்ஸுர் ரஹ்மான் நம்புகிறார்.

"ஒரு பொருளாதார சக்தியாக மட்டுமே வாழ முடியாது என்று சீனா உணரத் தொடங்கியுள்ளது. அரசியல், ராஜதந்திரம் மற்றும் புவிசார் அரசியலை கலக்காத வரையில், உலக வல்லரசாக மாற முடியாது என்பதை அமெரிக்காவிடமிருந்து அவர்கள் கற்றுக்கொண்டனர்" என்கிறார் அவர்.

தனக்காக சீனா எடுத்துக்கொள்ளும் அமெரிக்க மாடல் இது என்றும் அவர் தெரிவித்தார்.



**அமெரிக்கா விலகி நிற்பது சீனாவுக்கு பலனளிக்கிறதா?**

சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே நீண்ட காலமாக பதற்றம் நிலவி வரும் நிலையில், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆண்டனி பிளிங்கன் ஞாயிற்றுக் கிழமை சீனா சென்றடைந்தார்.

கடந்த ஐந்தாண்டுகளில் அமெரிக்க மூத்த தலைவர் ஒருவர் சீனாவுக்குச் செல்வது இதுவே முதல்முறை. அதே நேரத்தில், பைடன் 2021 இல் அதிபரான பிறகு சீனாவைச் சென்றடைந்த அவரது அமைச்சரவையின் முதல் அமைச்சர் பிளிங்கன் ஆவார்.

வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பத்தைப் பொறுத்தவரை, அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையிலான உறவு மிக மோசமான நிலையில் உள்ளது. தாய்வானுக்கு ஆதரவு அளிப்பது, ஆசியா மற்றும் பிற இடங்களில் தனது செல்வாக்கை செலுத்துவதற்கான முயற்சிகளில் அமெரிக்கா ஈடுபடுவது போன்றவை உறவில் விரிசலை அதிகரித்துள்ளது.

இதேபோல், கடந்த 10 ஆண்டுகளில் மத்திய கிழக்கு ஆசியாவிலிருந்தும் அமெரிக்கா விலகிச் சென்றுள்ளது. முன்பு காட்டியது போன்ற ஆர்வம் தற்போது இல்லை. மத்திய கிழக்கு ஆசியாவில் அமெரிக்கா கவனம் செலுத்தி வந்ததால், சீனா விலகியே இருந்தது.

ஜேஎன்யுவில் பேராசிரியராக உள்ள ஸ்வரன் சிங் கூறுகையில், "இப்போது அமெரிக்காவின் கவனம் ஐரோப்பா, உக்ரைன் போர் மற்றும் பசிபிக் பெருங்கடலில் அதிகமாக இருக்கும் போது, சீனா மத்திய கிழக்கில் ஆர்வமாக உள்ளது. சவூதி அரேபியாவோடும் ஈரானோடும் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தியது போலவே பாலஸ்தீனத்துடனும் உறவுகளை அதிகரிக்கவும் அவர்களுக்கு உதவவும் சீனா விரும்புகிறது" என்றார்.





தொடர்ந்து பேசிய அவர், 'பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரேல் பிரச்னையைப் பொறுத்த வரையில், அமெரிக்கா இஸ்ரேலுடன் நல்ல உறவைக் கொண்டுள்ளது. அதிபர் டொனால்ட் டிரம்பின் ஆட்சிக் காலத்தில் அது மேலும் மேம்பட்டுள்ளது, ஆனால் பாலஸ்தீனத்துடனான அதன் உறவுகள் நன்றாக இல்லை." என்று குறிப்பிடுகிறார்.

ஆனால் பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரேல் ஆகிய இரு நாடுகளுடனும் சீனாவின் உறவுகள் நன்றாக உள்ளன, மேலும் ஒப்பீட்டளவில் சீனா இந்த விவகாரத்தில் புதியவர் என்பதால், இரு நாடுகளுக்கும் இடையே ஒரு நேர்மறையான உரையாடலை எளிதாக்கும் என்று எதிர்பார்ப்பதில் தவறில்லை.

அமெரிக்காவை விட சீனாவை நம்புவது பாலஸ்தீனியர்களுக்கு எளிதாக இருக்கும்.

இஸ்ரேல் - பாலஸ்தீனத்துக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது எளிதானது அல்ல என்றாலும் சீனாவால் அவ்வாறு செய்ய முடியும் என்று மருத்துவர் பஸ்ஸுர் ரஹ்மான் நம்பினாலும், அது கடினமாகத் தெரிகிறது.

**அமெரிக்காவுக்கு எத்தகைய தாக்கத்தை இது ஏற்படுத்தும்?**

மத்திய கிழக்கு ஆசியாவில் அமெரிக்காவின் சார்பு குறைந்துள்ளது.

மத்திய கிழக்கில் அமெரிக்கா தனது பிடியைத் தக்க வைத்துக் கொள்ள விரும்பியதற்கு எண்ணெய் மற்றும் இஸ்ரேல் இவை இரண்டும் காரணமாக இருந்தது. இப்போது இந்த இரண்டுமே அந்தளவு முக்கியமில்லை என்று மருத்துவர் பஸ்ஸுர் ரஹ்மான் கூறுகிறார்.

ஈடுபாடு காட்டவில்லை என்று அமெரிக்கா கூறினாலும் அது முழுமையாக விலகிச் செல்லவும் இல்லை. மத்திய கிழக்கு ஆசியாவில் இன்னும் தனது இருப்பைத் தக்க வைத்துக் கொள்ள அது விரும்புகிறது.

ஆனால், மத்திய கிழக்கு நாடுகள் சீனாவுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் உள்ளன.

இது தொடர்பாக பஸ்ஸுர் ரஹ்மான் குறிப்பிடும் போது, "அவர்கள் அமெரிக்காவைப் பார்த்திருக்கிறார்கள், அமெரிக்காவில் வாழும் போது அவர்களின் பிரச்னைகளுக்கு தீர்வு இல்லை என்பதை அவர்கள் புரிந்து கொள்கிறார்கள்." என்கிறார்.

**சீனாவின் செல்வாக்கு இந்தியாவுக்கு கவலை அளிக்கிறதா?**

சீனா தனக்கான பிம்பத்தையும் நம்பகத்தன்மையையும் உருவாக்க முயற்சிக்கிறது, எனவே சீனாவின் இந்த நடவடிக்கைகளை இந்தியா அறிந்து கொள்ள வேண்டும் என்று ஸ்வரன் சிங் நம்புகிறார். ஆனால் இது பெரிய கவலை இல்லை, ஏனெனில் இந்தியா மத்திய கிழக்கு நாடுகளுடன் நல்ல உறவைக் கொண்டுள்ளது.

சிங் கூறுகையில், "இந்தியா அங்கு நல்ல உறவை உருவாக்கியுள்ளது. ஒருவருக்கொருவர் நட்பு கொள்ளாத நாடுகள் கூட, இந்தியாவுடன் உறவைப் பேண விரும்புகின்றன, அவற்றில் இஸ்ரேல், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் சவூதி அரேபியா ஆகியவை அடங்கும். நான்கு நாடுகளின் குழுவில் இந்தியாவையும் அமெரிக்கா சேர்த்திருக்கலாம்."

"சீனாவைப் போல முதலீடும் பணமும் இந்தியாவிடம் இல்லை என்பதில் இந்தியாவும் கவனமாக இருக்க வேண்டும் என்று நிபுணர்கள் கருதுகின்றனர், ஆனால் மத்திய கிழக்கு நாடுகளுடன் நல்ல அரசியல் மற்றும் சமூக உறவுகளை இந்தியா வைத்திருப்பது சாதகமாக பார்க்கப்படுகிறது."

# யோகாவும் வாழ்வும்

ஆக்கம் : ஸ்ரீ. நதிபரன்
(யோகா போதனாசிரியர்)

## சர்வதேச யோகா தினம் - ஜூன் 21

ஒரு கலை வடிவம் இற்றைக்கு பல்லாயிரம் வருடங்கள் கடந்தும் வாழ்ந்து வருகின்றதெனில் அதனுள் அமிழ்ந்திருக்கக்கூடிய அழியாப் பெருமைகள், தத்துவப்பொருண்மைகள் மக்கள் மத்தியில் ஆழமாக வேருன்றியிருக்க வேண்டும். இல்லாவிடில் காலவோட்டத்தில் அதன் இருப்பானது அடித்துச் செல்லப்பட்டிருக்கும். 64 கலைகளுள் ஒன்றாக திகழும் யோகக்கலையின் நுண்மைகள் குறித்து சிலாகிக்கையில் பல்லரிய சிறப்புகள் பொதிந்துள்ளமையை அறிந்துகொள்ள முடியும். மனித வாழ்வினை வரன்முறைக்குட்படுத்தி செழுமையுற, பயனுற வாழும் வழிமுறைகள் பற்றி வகுத்துரைக்கும் இக்கலை பற்றிய பிரக்ஞை பூர்வமான புரிதல்கள் காலவோட்டத்தில் அதிகரித்து வருகின்றமை கண்கூடு. உலக நாடுகளைப் பொறுத்தவரையில் யோகத்திலுள்ள நோய் குணமாக்கும் தன்மையை ஆய்ந்துணர்துகொண்டமையால்தான் அதன் மகத்துவம் பரந்து கிளைவிட்டு வருகின்றது. மக்களின் இயற்கைக்கு முரணான தற்போதைய வாழ்வியல் மாற்றத்தின் அகர்சிப்பினால் நோய்கள் மற்றும் பிணிநிலைகளின் பீடிப்புக்களால் அல்லலுற்று வரும் நிலையில் பக்கவிளைவுகள் இல்லாத, செலவில்லா மருத்துவமுறையாக யோகத்தினை கைக்கொள்ளத் தலைப்படுகின்றனர். காலாதிகாலம் நவீன மருத்துவ விஞ்ஞானமுறைகள் எவ்வளவுதான் முன்னேற்றமடைந்து வந்தாலும் மேற்கிளம்புகின்ற நோய்த்தாக்கங்களிற்கு அவை ஈடுகொடுக்க அல்லது கட்டுப்படுத்த முடியாமல் தோல்வி கண்டு வருகின்றமை யும் கண்கூடு. இந்நிலையில் இயற்கையோடிணைந்த வாழ்வியல் வழிமுறையாகவும் ஆன்ம ஈடேற்றத்திற்கான சாதனமாகவும் சித்தர்கள், மாகான்களால் ஆராதித்து போசிக்கப்பட்ட யோகக்கலையானது வாழ்வியலின் செழுமைநிலையினை எய்துவதற்காக உலக மக்களால் பின்பற்றப்பட்டு வருகிறது.

இங்கு ஆரோக்கியம் என்ற எண்ணக்கருவானது உடல், உள, சமூகம், ஆன்மிகம், சூழல் போன்ற விடயங்களில் நன்னிலை அடைவதனை நோக்காக கொண்டிருந்தாலும் பொதுவாக உடல் மற்றும் உள ஆரோக்கியத்தினை மேம்படுத்துவதனை மையப்படுத்தியே அதிகம் பேசப்படுகின்றன. இயற்கைக்கு முரணான நமது வாழ்வியல் முறையினால் நோய்களின் பெருக்கங்களும் அதற்கான மருந்துவகைகளின் உற்பத்தி - நுகர்வின் வேகமும் அதிகரித்துவருகின்றன. பொதுப்புத்தியில் நோக்கின் தற்போதைய மருந்துகளில் இருவிடயங்களை நம்மால் அவதானிக்க முடியும். மக்கள் இறக்காமலும் இருக்க வேண்டும் அத்துடன் சுகதேகிகளாக இருக்கவும் கூடாது. ஒருவருக்கு உடலில் எங்கோ பாதிப்பு ஏற்பட்டுள்ளது என வைத்துக் கொள்வோம். நோய்க்கு தீர்வு நாடி வைத்தியசாலை சென்றால் எல்லா மருத்துவ பரிசோதனைகளையும் முடிந்தவுடன் நோய்க்கான அறிகுறிகள் ஏதும் தென்படின் அதற்குரிய மருந்துவகைகளை வைத்தியர் பரிந்துரைப்பார். குறித்தவொரு பிணிக்கு மருந்து வகைகளை உட்கொள்ள ஆரம்பித்தால் இறக்கும் வரையிலும் தொடர்ச்சியாக பாவித்துக்கொண்டிருக்கும் துரதிஸ்டமான நிலைமைகளை பார்க்கிறோம். இதனை அடிப்படையாக வைத்தே மருந்துகளை உற்பத்தி செய்யும் பல்தேசிய நிறுவனங்களும் செயற்பட்டு வருகின்றன. ஒருவர் ஆரோக்கியமாக இல்லாதுவிடின் அதாவது நோய்வாய்ப் படுகையில் மருந்துப்பொருட்களின் நுகர்வு வீதம் ஏறுமுகமாகும் அதேவேளை அவர் இறக்காமல் நோய்களுடன் வாழ்க்கையை நீண்டகாலம் கழிப்பாராகில் அவற்றின் தொடர் பாவனைகளால் ஔடத உற்பத்தி நிறுவனங்களிற்கு அதிக வருமானங்கள் ஈட்டுவதையும் நிச்சயப்படுத்திக்கொள்ளலாம். எனவே பக்கவிளைவுகளற்றதும் செலவற்றதும் பாதுகாப்பானதுமாகிய முன்னோர்கள் நமக்களித்துச் சென்ற அரும்பெரும் பொக்கிசமான யோக நெறிமுறைகளை நம் வாழ்க்கையில் சரிவர கடைப்பிடித்தால் நீண்ட ஆயுளுடன் சந்தோசமாக வாழமுடியும் என்பதை சித்தர்களின் அனுபவ ரீதியாக நிறுவியிருக்கின்றனர்.






தற்கால மக்களது வாழ்வியல் கணிசமான மாற்றங்களை சந்தித்து வருகின்றது. இயற்கைக்கு முரணிலையாக வாழ்வியல் செல்நெறி கட்டமைகின்றமையால் வழமைக்கு மாறாக பல்வேறு நோய், பிணித்தாக்கங்களின் கோரப்பிடிக்குள் சிக்குவதற்கும் வழிசமைக்கின்றன. கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற நிலை மாறி தற்போது வைத்திய சாலையில்லா இடத்தில் குடியிருக்க வேண்டாம் என்றெண்ணும் வகையில் முன்னரைக் காட்டிலும் வீதிக்கு வீதி தனியார் வைத்தியசாலைகளின் பெருக்கமும் யாழ்.குடாவினை ஆக்கிரமித்து வருகின்றமை நோயாளிகளின் எண்ணிக்கையிலேற்படும் அதிகரிப்பையே சுட்டுகின்றது. நீங்கள் ஒரு தடவை மருத்துவ பரிசோதனைக்கென தனியார் வைத்திய சாலையொன்றிற்கு செல்லும் போது வைத்திய சேவை எங்ஙனம் வியாபார மாயைக்குள் அமிழ்ந்து வருகின்றது என்பது புலனாகும். ஒரு நாட்டில் வைத்தியசலைகள், சிறைச்சாலைகள் என்பவற்றின் எண்ணிக்கை அதிகரிக்கின்றதெனில் அந்நாட்டின் அபிவிருத்தியானது பின்னோக்கியே செல்லும் என்பது வெளிப்படை. எனவேதான் மேலைத்தேய கலாசாரங்களில் ஈர்ப்புக்கொள்ளாது செலவில்லாத இயற்கையோடிணைந்த யோக நெறிமுறையினை பின்பற்றும் விருப்பு எல்லோர் மனங்களிலும் துளிர்விட வேண்டும். அத்துடன் இன்றைய சமூகம் தடம் மாறிச்செல்வததால் எதிர்கால இளம் சந்ததி இருண்ட உலகத்தினை நோக்கியே பயணப்படுகின்றது. தற்காலத்தில் இதனை தடுத்து நிறுத்தவல்ல பிரம்மாஸ்திரமாக யோகக்கலை திகழ்கின்றதெனில் மாற்றுக்கருத்தில்லை.

சமகாலத்தில் யோகக்கலை மீதான மக்களின் நாட்டங்கள்- ஈடுபாடுகள் தன்னெழுச்சியாக அதிகரித்துவரும் நிலையில் அதிகளவு வேற்றின மக்கள்கூட இன மத பேதம் கடந்து இதனை பயில்வதற்கு அதிக ஆர்வம்காட்டி வருவதனையும் இதன்மூலம் உலக நாடுகள் பலவற்றில் கல்விக்கூடங்களிலும் யோகம் ஒரு பாடமாக உள்ளடக்கப்பட்டு போதிக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. நமது பிரதேசத்தினை பொறுத்தவரை புற்றீசல்கள் போல யோகப்பயிற்சி மையங்கள் உருவாகி வருகின்றமையும் பல பாடசாலைகளில் யோகாசனப் பயிற்சிகள் குறிப்பாக அதன் முக்கிய பிரிவாக அமைகின்ற சூரிய நமஸ்காரம் எனும் பயிற்சிமுறையானது மாணவர்களால் பின்பற்றப்பட்டு வருவதனையும் நாட்டிலுள்ள ஒரு சில பல்கலைக்கழகங்களில் கூட யோகக்கலை பயிற்றப்பட்டு வருகின்றமையும் நோக்கத்தக்கது. அத்துடன் தற்காலத்தில் சர்வதேச ரீதியாக பல்வேறு கல்விச்சாலைகளில் போதிக்கப்பட்டு வருகின்றமையும் உலகில் ஏராளமானோர் இக்கலையின்கண் இருக்கக்கூடிய பல்வேறு நன்மைகள் குறிப்பாக நோய் குணமாக்கல் திறன் அதிகமிருப்பதனால் இதன்பால் ஈர்க்கப்பட்டு கூடுதலானோர் இன, மத பேதம் கடந்து பயின்று பயன்பெற்று வருகின்றமையின் காரணமாகவோ என்னவோ அதன் மீது மக்கள் மத்தியில் விழிப்புணர்வினை மென்மேலும் அதிகரிப்பதற்காக பன்னாட்டு அரசியலின் உயர் பீடமாக விளங்குகின்ற ஐ.நா சபை கூட சர்வதேச ரீதியாக கொண்டாடி கௌரவம் செய்யவேண்டிய தினங்களுள் யோகக்கலையினையும் உள்ளடக்கியிருப்பதானது அதன் தாற்பரியத்தை- மேன்மையினை முரசறைந்து நிற்கின்றது. அதுமட்டுமல்லாமல் எமது நல்வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து அடிப்படை அம்சங்களையும் இது தன்னகத்தே கொண்டுள்ளமையால் இளையோர்களிடத்தில் இக்கலையினை கொண்டுசெல்கையில் திசைமாறிச் சென்று கொண்டிருக்கும் இன்றைய இளந்தலைமுறையினரின் வாழ்வியலில் கலங்கரைவிளக்கமாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.





# வெடிபொருட்களுடன் ஒருவர் கைதானார்!

கொழும்பு, ஜூன் 21

குற்றச்செயலில் ஈடுபடும் நோக்கில் மறைத்து வைக்கப்பட்ட வெடிபொருட்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பாணந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் வெடிபொருட்களுக்கான உரிமம் எதுவும் இல்லை என பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

6 டெட்டனேட்டர்கள், 6 கிலோ 800 கிராம் அமோனியா நைத்ரேட், ஜெல் ஆகியவை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஐ)



ஈழம் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தனை தமிழக ஆளுநர் ஆர். என். ரவி தனது மாளிகையில் பாராட்டி மதிப்பளித்த தருணம்...!

# மோட்டார் சைக்கிள் திருட்டு

மட்டக்களப்பு, ஜூன் 21

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட் ஒட்டமாவடியிலுள்ள வீடு ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் திருடப்பட்ட சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

வீட்டு முற்றத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பல்ஸர் மோட்டார் சைக்கிள் ஒன்றே இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

இரண்டு நபர்கள் மோட்டார் சைக்கிளை திருடிச் செல்லும் காட்சி அங்கு பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி கமெரா வில் பதிவாகியுள்ளது.

இத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# கடன் மீள் அறவிடல் சட்டங்களை மாற்றும் முன்னர் கலந்துரையாடுக!

## மத்திய வங்கிக்கு ஆலோசனை

கொழும்பு, ஜூன் 21

நாட்டில் தற்போது நடைமுறையில் இருக்கும் கடன் மீள் அறவிடல் சட்டங்களை மாற்றியமைப்பதற்கு முன்னதாக மாற்று வழிமுறைகள் குறித்து மத்திய வங்கியின் ஊடாக விரிவான கலந்துரையாடல்களை மேற்கொள்ளுமாறு இலங்கையின் வங்கிகள் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

நாட்டிலுள்ள வர்த்தக வங்கிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இந்தக் கட்டமைப்பானது, 'தற்போதைய சூழ்நிலையில் கடனை மீளச்செலுத்த முடியாததன் விளைவாக வணிக மற்றும் கைத்தொழில் துறையினர் முகங்கொடுத்திருக்கும் அழுத்தங்களை சீரமைப்பதை முன்னிறுத்தி செயல்திறன்மிக்கதும், உரியவாறு ஒருங்கிணைக்கப்பட்டதுமான முறையொன்று கையாளப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான கலந்துரையாடல்களை அரசாங்கம் மத்திய வங்கியின் ஊடாக வர்த்தக வங்கிகளுடன் முன்னெடுப்பது இன்றியமையாததாகும்' என்று அதன் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கடனை மீளச்செலுத்த முடியாமல் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கும் வணிகங்கள், கடன் மீள் அறவீடு தொடர்பான சட்டங்களை மாற்றியமைக்குமாறு வலியுறுத்திவரும் பின்னணியிலேயே இலங்கையின் வங்கிகள் அமைப்பு மேற்குறிப்பிட்ட விடயங்களை உள்ளடக்கி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக சுமார் 2 ட்ரில்லியன் ரூபாய்க்கும் மேற்பட்ட பெறுமதியுடைய கடன்மறுசீரமைப்பு மற்றும் கடன் மீள்செலுத்துகை இடைநிறுத்தம் என்பன மேற்கொள்ளப்பட்ட நிலையில், இவ்வருடத்தின் முதற்காலாண்டில் மீட்சியை நோக்கிய முயற்சிகள் வலுப்பெற்றதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

அதுமாத்திரமன்றி மத்திய வங்கி ஒழுங்குபடுத்தல் செயல்முறையின்கீழ் வங்கிக்கட்டமைப்பின் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கும், மேம்படுத்துவதற்கும் உதவுவதே தமது பிரதான நோக்கம் என்று சுட்டிக்காட்டியுள்ள அவ்வமைப்பு, இந்நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு வாடிக்கையாளர் வைப்புக்கள் மற்றும் முதலீட்டாளர்கள் அல்லது பங்குதாரர்களின் மூலதனம் ஆகியவற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது இன்றியமையாததாகும் என்று குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# மருந்துகளின் தரத்தை பரிசீலிக்க வசதியில்லை

கொழும்பு, ஜூன் 21

இலங்கைக்கு கொண்டு வரப்படும் மருந்துகளின் தரத்தினை பரிசீலிக்க தேவையான இரசாயன ஆய்வுகூடங்கள் இல்லை என்பதால், மருந்துகளின் தரம் தொடர்பில் பிரச்னை எழுந்துள்ளதாக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மயக்கமருந்து ஒன்றின் பயன்பாட்டின் பின்னர் இரண்டு மரணங்கள் பதிவாகியுள்ள நிலையில், மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை இவ்விடயத்தை தெரிவித்துள்ளது.

மருந்துகளை பரிசோதனை செய்யும் நிபுணர்கள் தற்போது நாட்டில் இல்லை எனவும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் எஸ். டி. ஜயரத்ன குறிப்பிட்டார்.

அண்மையில் கண் நோய்க்கான மருந்துகள் தொடர்பில் பிரச்சினை எழுந்திருந்த வேளை, அவை பழுதடைந்திருந்தமை பின்னரே கண்டறியப்பட்டது. எனினும், அந்த மருந்துகள் அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டிருந்ததாக சபையின் தலைவர் சுட்டிக்காட்டினார்.






# கிழக்கு மாகாண அமைச்சுக்களின் பதில் செயலாளர்கள் கடமையேற்பு





திருமலை, ஜூன் 21

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் பதில் செயலாளராக, பிரதிப் பிரதம செயலாளராக பதவி வகித்த ஏ.மன்சூரும், கிழக்கு மாகாண முதலமைச்சின் பதில் செயலாளராக, உள்ளூராட்சி ஆணையாளராக பதவி வகித்த நாகராசா மணிவண்ணனும் நியமிக்கப்பட்டு தங்கள் கடமைகளை நேற்று முன்தினம் பொறுப்பேற்றனர்.

கிழக்கு மாகாண அமைச்சுக்களில் நிலவி வந்த செயலாளர் பதவிகளுக்கு பதில் செயலாளர்களை நியமிப்பது தொடர்பில் பிரதம செயலாளர் ஆர்.எம். பி.எஸ்.ரத்நாயக்க, ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் பரிந்துரை செய்ததையடுத்து, அவர்களுக்கான இந்நியமனம் வழங்கப்பட்டது.

அதற்கமைவாக, குறித்த அமைச்சுக்களுக்கு பதில் செயலாளர்களாக நியமிக்கப்பட்ட ஏ.மன்சூர் மற்றும் நாகராசா மணிவண்ணன் ஆகியோர்கள் தங்களின் கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், உதவிச் செயலாளர்கள், மாகாண ஆணையாளர்கள், மாகாண பணிப்பாளர்கள் உள்ளிட்ட உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (அ)

# கொள்ளையிடப்பட்ட ரீ.வி. மயானத்துக்குள் புதைப்பு

மட்டக்களப்பு, ஜூன் 21

கொள்ளையிடப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டி மயானத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்ட சம்பவமொன்று அக்கரைப்பற்றில் இடம்பெற்றுள்ளது.

சடலமொன்றைப் புதைப்பதற்காக கடந்த திங்கட்கிழமை வந்திருந்தவர்கள், அங்கு பெட்டியொன்று புதைக்கப்பட்டுள்ளதை அவதானித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். அதனையடுத்தே அந்தப் பெட்டி தோண்டி எடுக்கப்பட்டது.

அந்த தொலைக்காட்சிப் பெட்டி, அக்கரைப்பற்று 8 பிரிவின் பழைய ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொள்ளையிடப்பட்டது என கண்டறியப்பட்டது.

அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி சதாத் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

வீட்டில் இருந்த ஐந்தரை பவுண் தாலி மற்றும் பெறுமதியான தொலைக்காட்சி ஆகியன திருடப்பட்டுள்ளதாக வீட்டின் உரிமையாளரின் தந்தை பொலிஸில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முறைப்பாடு செய்திருந்தார்.

இதனை தொடர்ந்து சம்பவ இடத்திற்குச் சென்ற அக்கரைப்பற்று பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர். இந்நிலையிலேயே மாயானத்தில் இருந்து தொலைக்காட்சிப் பெட்டி மீட்கப்பட்டது. (அ)

# விவசாயிகளுக்கு இலவச யூரியா

அம்பாறை, ஜூன் 21

அம்பாறை மாவட்டத்தில் 2023 சிறுபோக நெற்செய்கைக்கு இலவசமாக யூரியா உரம் கமநல சேவை மத்திய நிலையங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருவதாக பாலமுனை கமநல சேவை மத்திய நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல். அஷ்ரப் தெரிவித்தார்.

சிறுபோக நெல் விவசாயிகளுக்கு யூரியா உர நிவாரணம் வழங்கும் திட்டத்தின் கீழ் பாலமுனை கமநல சேவை மத்திய நிலைய பிரிவுக்குட்பட்ட ஒலுவில், தீகவாபி மற்றும் பாலமுனை விவசாயிகளுக்கு இலவச யூரியா உரம் கையளிக்கும் வைபவம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை பாலமுனை உர களஞ்சியசாலையில் நடைபெற்றது. (அ)

# அறநெறிப் பாடசாலைகளில் ஒரு பிடி அரிசி சேகரித்து பிறர் உயிர்வாழ உதவும் திட்டம்!




மட்டக்களப்பு, ஜூன் 21

அறநெறிப் பாடசாலைகளில் ஒரு கைபிடி அரிசி சேகரித்து பிறர் உயிர்வாழ உதவும் செயற்றிட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டது.

மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபரின் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த்தின் ஆலோசனைக்கமைவாக மாவட்டத்திலுள்ள அனைத்து அறநெறிப் பாடசாலைகளிலும் இச்செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந் நிகழ்வின் உத்தியோக பூர்வ மாவட்ட நிகழ்வு கடந்த 18 ஆம் திகதி மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கி. குணநாயகம் ஒழுங்கமைப்பில் களுவாஞ்சிக்குடி பிரதேச செயலக பிரிவிலுள்ள சைவ மகாசபை அறநெறிப் பாடசாலையில் இடம்பெற்றது. ஒரு பிடி அரிசி சேகரித்து பிறர் உயிர்வாழ உதவுவோம் செயற்றிட்டம் இதன்போது ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் மூலம் சேகரிக்கப்படும் அரிசி அப்பிரதேசத்திலுள்ள சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு வழங்கப்படவுள்ளது. களுவாஞ்சிக்குடி சைவ மகாசபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் கே.மதிசீலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாணிக்க பிள்ளையார் ஆலய பிரதம குரு,அதன் கிராமத் தலைவர்,பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்,ஆலயங்களின் நிர்வாகிகள், அறநெறிப்பாடசாலையின் அதிபர்,ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# காத்தான்குடி வடிகால்களை தூய்மைப்படுத்தவேண்டும்!

## வர்த்தகர்களுக்கு பொலிஸார் பணிப்பு





மட்டக்களப்பு, ஜூன் 21

**மட்டக்களப்பு மாநகர சபை பிரதேசத்துக்குட்பட்ட காத்தான்குடி எல்லைப் பிரதேசங்களில் பிரதான வீதியில் கழிவு, மழை நீர் வடிந்தோடமுடியாத நிலையிலும் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலும் வடிகால்கள் காணப்படுகின்றன. வர்த்தகர்கர்களும் பொது மக்களும் கழிவுப்பொருட்களை இட்டு அவற்றை மூடியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.**

நேற்று செவ்வாய்க்கிழமை காத்தான்குடி பொலிஸ் நிலைய சுற்றுச் சூழல் பாதுகாப்பு பிரிவு பொறுப்பதிகாரி எம்.ஏ.சி. ஜவாஹிர் தலைமையிலான பொலிஸார் குறித்த அடைபட்டுள்ள வடிகால்களை அடையாளம் கண்டு உடனடியாக அவற்றை தூய்மைப்படுத்தி நீர் வடிந்தோடச் செய்யுமாறு உத்தரவிட்டனர். (அ)

# மட்டக்களப்பில் தியாகிகள் தினம்






மட்டக்களப்பு, ஜூன் 21

ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தின் தலைவர் பத்மநாபா உட்பட படுகொலை செய்யப்பட்ட உறுப்பினர்களின் தியாகிகள் தினம் மட்டக்களப்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு வீச்சுக்கல்முனையில் உள்ள கட்சியின் காரியாலயத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது. (அ)

# டைட்டானிக் கப்பலின் சிதைவுகளை பார்வையிட சென்ற நீர்மூழ்கி மாயம்!

## சுற்றுலாப் பயணிகள் ஐவரை மீட்க துரித நடவடிக்கை

நியூயோர்க், ஜுன் 21

**அட்லாண்டிக் கடலில் மூழ்கியுள்ள டைட்டானிக் கப்பலை பார்வையிட சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் சென்ற சிறிய நீர்மூழ்கிக் கப்பல் கடலில் திடீரென மறைந்து விட்டது.**

**இந்த நீர்மூழ்கியை கண்டறிய அட்லாண்டிக் கடலில் பெருமெடுப்பில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.**

பயணத்தை ஆரம்பித்த ஒரு மணி நேரம் 45 நிமிடங்களில் தொடர்பு இழந்ததாக அமெரிக்க கடலோர காவல்படை தெரிவித்துள்ளது.

கப்பலில் இருந்த ஐந்து பேரை மீட்பதற்கான அனைத்து விருப்பங்களும் ஆராயப்பட்டு வருவதாக சுற்றுலா நிறுவனமான ஓஷன்கேட் தெரிவித்துள்ளது.

3,800 மீ (12,500 அடி) ஆழத்தில் உள்ள டைட்டானிக் கப்பலின் எச்சங்களை பார்வையிடுவதற்கான எட்டு நாள் கடலடி சுற்றுலா பயணத்திற்கான டிக்கெட்டுகளின் விலை 250,000 டொலர் (7,67,52,600 இலங்கை ரூபா).

அரசு நிறுவனங்கள், அமெரிக்க மற்றும் கனேடிய கடற்படைகள் மற்றும் வணிக ஆழ்கடல் நிறுவனங்கள் மீட்பு நடவடிக்கைக்கு உதவுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

டைட்டானிக்கின் சிதைவு நியூபவுண்ட்லாந்தின் செண்.ஜோன்ஸிலிருந்து தெற்கே 435 மைல்கள் (700 கிமீ) தொலைவில் உள்ளது. இருப்பினும் மீட்புப் பணி மாசசூசெட்ஸின் பாஸ்டனில் இருந்து இயக்கப்படுகிறது.

காணாமல்போன கிராப்ட் ஓஷன்கேட்டின் டைட்டன் நீர்மூழ்கிக் கப்பல் டிரக்-அளவிலானது. ஐந்து பேரை ஏற்றிக் கொண்டு, நான்கு நாள் அவசர கால தேவை ஒட்சிசனுடன் ஆழ் கடல் சுற்றுலாவுக்கு செல்கிறது.

கடந்த திங்கட்கிழமை பிற்பகல், அமெரிக்க கடலோர காவல்படையினர், நீர்மூழ்கிக் கப்பல் காணாமல் போன தகவலை அறிவித்தனர்.



காணாமல்போன நீர்மூழ்கிக் கப்பலில் இருந்தவர்களில் 58 வயதான பிரிட்டிஷ் கோடீஸ்வர தொழிலதிபரும், ஆராய்ச்சியாளருமான ஹமிஷ் ஹார்டிங்கும் ஒருவர் என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

வார இறுதியில் சமூக ஊடகங்களில், ஹார்டிங், டைட்டானிக் கப்பலின் சிதைவுக்கான பயணத்தில் தான் இருப்பேன் என்று "இறுதியாக அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறேன்" என கூறினார் - ஆனால் "40 ஆண்டுகளில் நியூபவுண்ட்லேண்டில் மிக மோசமான குளிர்காலம் இருப்பதால், இந்த பணி 2023 இல் டைட்டானிக் கப்பலுக்கான முதல் மற்றும் ஒரே ஆள் அனுப்பும் பணியாக இருக்கலாம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஓசன்கேற் நிறுவனம் தனது கார்பன்-பைபர் நீர்மூழ்கிக் கருவியில் எட்டு நாள் பயணத்தை "அன்றாட வாழ்க்கையை விட்டு வெளியேறி உண்மையிலேயே அசாதாரணமான ஒன்றைக் கண்டறியும் வாய்ப்பு" என்று விளம்பரம் செய்கிறது.

அதன் வலைத்தளத்தின்படி, தற்போதைய பயணத்திற்கு அடுத்ததாக, ஜுன் 2024 இல் 2 பயணங்கள் திட்டமிட திட்டமிடப் பட்டுள்ளது. (அ)

# மாபெரும் விமானக் கண்காட்சி பாரிஸ் நகரில் ஆரம்பமாகியது!

## 500 எயார்பஸ் விமானங்களை வாங்க இந்திய நிறுவனம் ஓடர்

பாரிஸ், ஜுன் 21

பாரிஸில் பிரமாண்டமான சர்வதேச விமான, விண்வெளிக் கண்காட்சி நேற்று முன் தினம் திங்கட்கிழமை ஆரம்பமாகியுள்ளது. பாரிஸின் புறநகராகிய லூ பூஜேயில் உள்ள சர்வதேச விமான நிலையத் தளத்தில் இந்தக் கண்காட்சியை அதிபர் மக்ரோன் தொடக்கி வைத்தார்.

எதிர்வரும் 25 ஆம் திகதி வரை கண்காட்சி நடைபெறும். உள்நாட்டிலும் உலகெங்கிலும் இருந்து வருகைதரவுள்ள லட்சக்கணக்கானவர்கள் அதனைப் பார்வையிடவுள்ளனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை நடைபெற்றுவருகின்ற இந்தக் கண்காட்சி 2021 இல் கொரோனா வைரஸ் தொற்று நோய் காரணமாக இடம்பெறவில்லை. நான்கு ஆண்டுகள் கடந்து 2023 இல் கண்காட்சி மீண்டும் அதன் மிடுக்குடன் தொடங்கியுள்ளது.

வைரஸ் பெருந்தொற்று நோய்க்காலத்தில் முடங்கிப் போய் கிடந்த விமானப் போக்குவரத்துத் துறை மீண்டும் அதன் வழக்கமான - பரபரப்பான- நிலைமைக்குத் திரும்பி உள்ளது. இந்த சமயத்தில் அமெரிக்காவின் போயிங் மற்றும் ஐரோப்பாவின் எயார்பஸ் ஆகிய உலகின் ஆகிய இரண்டு பிரதான விமானத் தயாரிப்பு நிறுவனங்களினதும் பெரும் போட்டிக் களமாக இந்த லூ பூஜே கண்காட்சி மாறியுள்ளது. ஒருலட்சத்து 25 ஆயிரம் சதுர அடி நிலப்பரப்பில் 158 விமானங்கள் மற்றும் ஹெலிக்கொப்ரர்கள், பறக்கும் டக்ஸிகள் ட்ரோன்கள், நவீன வர்த்தக ஜெற் விமானங்கள், அமெரிக்க சண்டை விமானங்கள் என்பன காட்சிப்படுத்தப் பட்டுள்ளன. விண்வெளி சார்ந்த வான் ஊர்திகள் மற்றும் சாதனங்களின் கண்காட்சி தனிப் பிரிவாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.




எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை காலை 08.30 மணி முதல் மாலை 18.00 மணிவரை பொதுமக்கள் கட்டணம் செலுத்திக் கண்காட்சியைப் பார்வையிட முடியும்.

நேற்று முன் தினம் திங்கட்கிழமை கண்காட்சியின் ஆரம்ப நாளில் சிவில் விமானங்களது விற்பனைக்கான மிகப் பெரிய ஓடர் ஒன்றைப் பிரான்ஸின் எயார்பஸ் நிறுவனம் வென்றுள்ளது. இந்தியாவின் இன்டிகோ விமான சேவை நிறுவனம் 500 விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தத்தை எயார்பஸ் நிறுவனத்துடன் செய்துகொள்வதாக அறிவித்துள்ளது. சிவில் விமானக் கொள்வனவில் இதுவரை செய்யப்பட்ட விற்பனை உடன்படிக்கைகளில் ஆகக் கூடிய விமானங்களின் மிகப் பெரிய கொள்வனவு உடன்பாடு இதுவே என்று வர்ணிக்கப்படுகிறது. ஏ 320 குடும்பத்தைச் சேர்ந்த

500 விமானங்களை 55 பில்லியன் டொலர்களுக்கு இன்டிகோ நிறுவனம் வாங்கவுள்ளது. 2030-2035 ஆம் ஆண்டு காலப் பகுதிக்குள் எயார்பஸ் நிறுவனம் இந்த விமானங்களைத் தயாரித்து வழங்கும். கடந்த பெப்ரவரியில் இந்தியன் எயார் லைன்ஸ் நிறுவனம் 470 விமானங்களை வாங்குவதற்கான ஓர் உடன்பாட்டை எயார்பஸ் நிறுவனத்துடன் செய்திருந்தது. (அ)

# பிலிப்பைன்ஸ் படகில் தீ!




மணிலா, ஜுன் 21

பிலிப்பைன்ஸில் கடலில் பயணித்துக்கொண்டிருந்த படகில் தீ விபத்து ஏற்பட்ட நிலையில், அதில் சென்ற 120 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

இது தொடர்பான தகவலின் அடிப்படையில், விரைந்து சென்ற கடலோரக் காவல்படை, இரண்டு கப்பல்களில் சென்று தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

சுமார் 5 மணி நேரத்துக்கும் மேலாக போராடி தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்ட நிலையில், படகில் இருந்த 120 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

பிலிப்பைன்ஸில், குறிப்பாக தொலைதூர மாகாணங்களில் அடிக்கடி ஏற்படும் புயல், மோசமாகப் பராமரிக்கப்படும் படகுகள், பயணிகள் நெரிசல், பாதுகாப்பு விதிமுறைகளில் கவனக் குறைவு ஆகியவற்றால் கடல் விபத்துகள் ஏற்படுவது வாடிக்கையாக உள்ளது குறிப்பிடத்தக்கது. (அ)

# நியூசிலாந்தில் இயங்கிவரும் சீன உணவகத்தில் தாக்குதல்

## நால்வர் காயம்

வெலிங்டன், ஜுன் 21

நியூசிலாந்தில் உள்ள சீன உணவகத்தில் கோடரியுடன் நுழைந்த நபர் அங்கிருந்த வாடிக்கையாளர்களை தாக்கிள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் இரவு 9 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

உணவகத்திற்கு கோடரியுடன் வந்த நபர் அங்கிருந்த வாடிக்கையாளர்கள் மீது கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தியுள்ளார். ஒவ்வொரு உணவகமாக சென்று அந்த நபர் தாக்குதல் நடத்தினார்.

கோடரியால் நடத்தப்பட்ட தாக்குதலில் உணவக வாடிக்கையாளர்கள் 4 பேர் படுகாயமடைந்தனர்.




இந்த சம்பவத்தை தொடர்ந்து அங்கு விரைந்து சென்ற பொலிஸார் கோடரி தாக்குதல் நடத்திய 24 வயது இளைஞரை கைது செய்தனர். இந்த தாக்குதலுக்கான காரணத்தை குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.




# விறுவிறுப்பான கட்டத்தில் ஆஷஷ் டெஸ்ட் போட்டி!

பர்கிங்ஹாம், ஜூன் 21

இங்கிலாந்து வெற்றி பெற 7 விக்கெட்கள் தேவை, அவுஸ்திரேலியா வெற்றி பெற இன்னும் 174 ஓட்டங்கள் தேவை என்று விறுவிறுப்பை ஏற்படுத்தும் நிலையில் உள்ளது ஆஷஷ் டெஸ்ட் போட்டி.

இங்கிலாந்து அணி தனது இரண்டாவது இன்னிங்ஸை அதிரடியாக ஆடியது. ஆனால், அதிரடியாக பந்து வீசிய ஆஸியின் அணித் தலைவர் பட் கம்மின்ஸ், நதன் லயன் இங்கிலாந்தை சாய்த்தனர். அந்த அணி 273 ஓட்டங்களைப் பெற்றது.

ஆட்டம் தொடங்கி பட் கம்மின்ஸ் வீசிய முதல் பந்தையே ஜோ ரூட் ரிவர்ஸ் ஷொட் ஆட முயன்றார். இதனால், அதிரடியாக ஆட முயன்ற ஆஸி. கள வியூகத்தை அமைக்கத் தொடங்கியது.

ரூட் 46, ஹாரி புக் 46, பென் ஸ்ரோக்ஸ் 43 ஓட்டங்களை சேர்த்தனர். ஏனைய வீரர்கள் அவ்வளவாக பிரகாசிக்கவில்லை. இங்கிலாந்து 2வது இன்னிங்ஸில் மொத்தமே 66.2 ஓவர்கள்தான் ஆடியது. இதில் பட் கம்மின்ஸ் 18.2 ஓவர்களில் 63 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும் நதன் லயன், 24 ஓவர்களில் 80 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

281 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய ஆரம்ப வீரர்களான டேவிட் வோர்ணரும் உஸ்மான் கவாஜாவும் நிதானத்துடன் துடுப்பெடுத்தாடி 61 ஓட்டங்களைப் பகிர்ந்து அவுஸ்திரேலியாவுக்கு இரண்டாவது இன்னிங்ஸில் சிறப்பான ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர்.

ஆனால், டேவிட் வோர்ணர், மோர்னஸ் லபுஷான், ஸ்ரீவன் ஸ்மித் ஆகிய மூவரும் 28 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆட்டம் இழக்க அவுஸ்திரேலியா தடுமாற்றத்துக்கு உள்ளானது.

எவ்வாறாயினும், உஸ்மான் கவாஜாவும் இராக்காப்பாளன் ஸ்கொட் பொலண்ட்டும் நிதானத்துடன் துடுப்பெடுத்தாடி மேலும் விக்கெட்கள் சரிவதைத் தடுத்து 4ஆம் நாள் ஆட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்தனர். அப்போது ஆஸி. அணி 3 விக்கெட்கள் இழப்புக்கு 107 ஓட்டங்களை பெற்றது.

உஸ்மான் கவாஜா 34, ஸ்கொட் பொலண்ட் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இங்கிலாந்தின் பந்து வீச்சில் ஸ்ருவர் பிரொட் 2, ஒல்லி ரொபின்சன் ஒரு விக்கெட்டை எடுத்துள்ளனர்.

(ஐ)

## உலகக் கிண்ண தகுதி சுற்று; இலங்கை அபார வெற்றி!




புலவாயோ, ஜூன் 21

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கான தகுதிச் சுற்று ஆட்டத்தில் இலங்கை அணி 175 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஐக்கிய அரபு அமீரகத்தை வீழ்த்தியது.

2023ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி இந்தியாவில் வரும் ஒக்ரோபர் முதல் நடைபெறவுள்ளது. இதில் 8 அணிகள் நேரடியாகத் தகுதி பெற்றுவிட்டன. எஞ்சிய 2 இடங்களுக்கான அணிகள், தகுதிச் சுற்று மூலம் தேர்வு செய்யப்படும்.

இந்நிலையில் தகுதிச் சுற்று ஆட்டங்கள் சிம்பாப்வேயில் நடைபெற்று வருகின்றன. சிம்பாப்வேயின் புலவாயோ நகரிலுள்ள குயின்ஸ் ஸ்போர்ட்ஸ் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கையும், ஐக்கிய அரபு அமீரக அணியும் மோதின.

இதில் முதலில் விளையாடிய இலங்கை 50 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 355 ஓட்டங்களைக் குவித்தது.

அணியில் அதிகபட்சமாக குசல் மெண்டிஸ் 78 ஓட்டங்களைக் குவித்தார். பதும் நிசங்க 57, கருணாரத்ன 52, சமரவிக்ரம 73, அசலங்கா 48, வனிந்து ஹசரங்க 23 ஓட்டங்கள் குவித்தனர்.

ஐக்கிய அரபு அமீரகம் தரப்பில் அலி நசீர் 2, முஸ்தபா, ஆயன் கான், பசில் ஹமீது ஆகியோர் தலா ஒரு விக்கெட் சாய்த்தனர்.

பின்னர் விளையாடிய ஐக்கிய அரபு அமீரக அணி 39 ஓவர்களில் 180 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து 175 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி கண்டது. வனிந்து ஹசரங்க அபாரமாக பந்துவீசி 24 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்து 6 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

புலவாயோவில் நடைபெற்ற மற்றொரு தகுதிச் சுற்று ஆட்டத்தில் ஓமன் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் அயர்லாந்து அணியைத் தோற்கடித்தது.

## யூரோ கிண்ண உதைபந்து; இங்கிலாந்து அபார வெற்றி



ஓல்ட் டிரபார்ட், ஜூன் 21

இங்கிலாந்தின் ஓல்ட் டிராபர்டில் நேற்று அதிகாலை நடைபெற்ற யூரோ கிண்ண உதைபந்தாட்ட தகுதிச் சுற்றுப் போட்டியில் இங்கிலாந்து அணி, வடக்கு மசிடோனியா அணியை 7-0 என்ற கோல்கள் கணக்கில் வீழ்த்தி, குழு சி-யில் 6 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது.

இங்கிலாந்து அணிக்கு ஹாரி கேன் ஆட்டத்தின் 29 மற்றும் 73ஆவது நிமிடங்களில் கோல்களை அடிக்க புகாயோ சாகா 38, 47, 51-வது நிமிடங்களில் கோல்களை அடித்து ஹட்ரிக் சாதனை புரிந்தார்.

மார்கஸ் ராஷ்போர்ட் 45ஆவது நிமிடத்திலும், கெல்வின் பிலிப்ஸ் 64ஆவது நிமிடத்திலும் கோல்களை அடித்தனர். இந்தத் தோல்வி வடக்கு மேசிடோனியாவின் உதைபந்து வரலாற்றில் மோசமான படுதோல்வி என்று வர்ணனையாளர்கள் வர்ணித்துள்ளனர்.

ஜேர்மனியில் அடுத்த கோடையில் நடைபெறும் யூரோ கிண்ண உதைபந்தாட்டத்துக்கு இங்கிலாந்து தகுதி பெறும் நிலையை எட்டியுள்ளது. இந்த ஆட்டத்தின் தொடக்கத்தில் வடக்கு மசிடோனியாவின் தடுப்பு உத்தி அட்டகாசமாக அமைய இங்கிலாந்து ஊடுருவ தடுமாறியது. ஆனால், இங்கிலாந்து அணித் தலைவர் ஹாரி கேன் 29ஆவது நிமிடத்தில் லூக் ஷா தட்டிக் கொடுத்த பந்தை அற்புதமாக கோலாக மாற்ற அது ஏனைய கோல்களுக்கும் திறவுகோலாக அமைந்தது.

உடனே 38ஆவது நிமிடத்தில் ஹட்ரிக் நாயகன் சாகா, கைல் வாக்கர் கடத்தி கொடுத்த பந்தை கோலாக மாற்ற 45ஆவது நிமிடத்தில் மார்கஸ் ராஷ்போர்ட், ஜோர்டான் ஹெண்டர்சனின் அபாரமான ஆட்டத்தால் 3ஆவது கோலை அடித்தார். இந்நிலையிலிருந்து ஆட்டம் முற்றிலும் ஒருதலைப்பட்சமாக மாறியது. 47ஆவது நிமிடத்தில் சாகா, ட்ரெண்ட் அலெக்சாண்டர் நீண்டதூரத்துக்கு அடித்துக் கொடுத்த பந்தை அற்புதமாக கட்டுப்படுத்தி இடது காலால் ஓங்கி உதைக்க பந்து கோல் காப்பாளர் டிமிட்ரிவ்ஸ்கியைத் தாண்டி கோலாக மாறியது.

இதற்கு அடுத்ததாக சாகா, அணித் தலைவர் ஹாரி கேனின் அருமையாகத் தட்டிக் கொடுத்த பந்தை கோலாக மாற்ற ஹட்ரிக் சாதனை புரிந்தார். இறுதியில் இங்கிலாந்து 7 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(ஐ)

# நேஷன்ஸ் லீக் உதைபந்து ஸ்பெயின் அணி சம்பியன்!




ரோட்டர்டாம், ஜூன் 21

குரோஷியாவை வீழ்த்தி நேஷன்ஸ் லீக் கிண்ணத்தைக் கைப்பற்றியது ஸ்பெயின் அணி.

ஐரோப்பிய உதைபந்தாட்ட சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் நடத்தப்பட்ட நேஷன்ஸ் லீக் தொடரின் இறுதி ஆட்டம் நேற்று நெதர்லாந்தின் ரோட்டர்டாம் நகரில் ஸ்பெயின் - குரோஷியா அணிகள் மோதின.

இதில், நிர்ணயிக்கப்பட்ட 90 நிமிடங்கள் முடிவில் இரு அணிகள் தரப்பிலும் கோல் ஏதும் அடிக்கப்படவில்லை. இதையடுத்து வெற்றியை தீர்மானிக்கக்கூடுதல் நேரம் வழங்கப்பட்டது. இந்த 30 நிமிடங்களிலும் கோல் ஏதும் அடிக்கப்படவில்லை.

இதனால் சமநிலை தவிர்ப்பு முறை கடைபிடிக்கப்பட்டது. இதில் ஸ்பெயின் அணி 5-4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றது.

முதல் 4 வாய்ப்பில் ஸ்பெயின் வீரர்கள் ஜோஸ்லு, ரோட்ரி, மெரினோ, அசென்சியோ கோல் அடித்து அசத்தினார். அதேவேளையில், குரோஷியா அணியில் விளாசிக், புரோஸோவிக், லூகா மோட்ரிக் கோல் அடித்தனர். லோவ்ரோ மேஜர் இலக்கை நோக்கி உதைத்த பந்தை ஸ்பெயின் கோல் காப்பாளர் உனை சைமன் அற்புதமாக பாய்ந்தவாறு காலால் தட்டிவிட்டார்.

ஸ்பெயின் அணியின் 5ஆவது வாய்ப்பை லபோர்ட்டே வீணடித்தார். அவர், உதைத்த பந்து கோல் கம்பத்தில் பட்டு திரும்பியது. மாறாக குரோஷியா அணியின் 5ஆவது வாய்ப்பில் பெர்சிக் கோல் அடித்தார். இதனால் ஆட்டம் 4-4 சமநிலையில் இருந்தது. கடைசி வாய்ப்பில் குரோஷியாவின் பட்கோவிக் உதைத்த பந்தை உனை சைமன் பாய்ந்தபடி கைகளால் தட்டிவிட்டார். இதனால் குரோஷியா ரசிகர்கள் அதிர்ச்சியில் உறைந்தனர். மறுபுறம் ஸ்பெயின் அணியின் கார்வஜல் கடைசி வாய்ப்பில் பந்தை கோல் வலைக்குள் திணிக்க சக அணி வீரர்கள் உற்சாகத்தில் திளைத்தனர். சர்வதேச உதைபந்து அரங்கில் ஸ்பெயின் அணி 11 வருடங்களுக்கு பிறகு தற்போதுதான் கிண்ணத்தை வென்றது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் கடவுச்சீட்டு கைவிரல் பதிவு ஆரம்பம்





யாழ்ப்பாணம், ஜூன் 21

கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்கான கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை யாழ்.மாவட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பிரதேச செயலக ஆட்பதிவுக் கிளையில் பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறியால் நேற்று முன்தினம் உத்தியோக பூர்வமாக இந்த நடவடிக்கை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு இணையத்தள மூடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பின்னர் விண்ணப்பதாரிகளுக்கு அவர்களது தொலைபேசிக்கு அனுப்பப்படும் குறுந்தகவலுக்கு அமைய அவர்கள் பிரதேச செயலக ஆட்பதிவுக் கிளைக்குச் சென்று தமது கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்துகொள்ள முடியும்.

யாழ். மாவட்டத்தில் இந்த நடவடிக்கைக்காகப் பருத்தித்துறை பிரதேச செயலகமும் சாவகச்சேரி பிரதேச செயலகமும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# எல்பிட்டிய வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை பிரிவு முடக்கம்

கொழும்பு, ஜூன் 21

மின் தூக்கிகள் இரண்டும் செயலிழந்ததன் காரணமாக எல்பிட்டிய ஆதார வைத்தியசாலையில் நேற்று நடைபெறவிருந்த அனைத்து சத்திர சிகிச்சைகளும் பிற்போடப்பட்டுள்ளதாக எல்பிட்டிய ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் திமுது அமரசிங்க தெரிவித்தார்.

இந்த வைத்தியசாலையின் மூன்று மாடிக் கட்டடத்தில் பெண் மற்றும் ஆண் விடுதிகள் அமைந்துள்ளன. இந்த விடுதிகளில் அனுமதிக்கப்படும் நோயாளிகள் மற்றும் திட்டமிடப்பட்ட அறுவைச் சிகிச்சைகளுக்கு பரிந்துரைக்கப்படும் நோயாளிகள் இந்த மின்தூக்கிள் மூலம் அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

ஆனால், நேற்று முன் தினம் இரவு இந்த இரண்டு மின்தூக்கிகளும் திடீரெனப் பழுதடைந்தமையால், நோயாளிகளை நகர்த்துவதில் சிரமம் ஏற்பட்டது.

குறிப்பாக சத்திர சிகிச்சைக்கு அழைத்துச் செல்லப்படும் நோயாளிகளை மயக்கமடைந்த பின் கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக நேற்று மேற்கொள்ளப்படவிருந்த அனைத்து சத்திர சிகிச்சைகளும் பிற்போடப்பட்டுள்ளதாக வைத்தியசாலை அத்தியட்சகர் வைத்தியர் திமுது அமரசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட மின்தூக்கி நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த இரண்டு இயந்திரங்களும் மிக விரைவில் பழுது பார்க்கப்படும் என நம்புவதாகவும் அவர் கூறினார். (அ)

# அடுத்துவரும் ஜனாதிபதியை பெரமுனவே தீர்மானிக்கும்!

## சாகர காரியவசம் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 21

**நாட்டின் அடுத்த ஜனாதிபதியை பொதுஜன பெரமுனவே தீர்மானிக்கும் என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.**

அதன்பிரகாரம் அடுத்த பாராளுமன்றிலும் பொதுஜன பெரமுன பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, அநுரகுமார திஸாநாயக்கவின் கட்சி, நாட்டில் மீண்டும் வன்முறையான கலாசரத்தை நாட்டில் ஏற்படுத்தவே கடந்த காலங்களில் செயற்பட்டது என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

தங்களின் கருத்துக்கு இணங்காத நபர்கள் மீது தாக்குதல் நடத்தி நடு வீதியில் வைத்துக் கொலை செய்து மோசமான கலாசாரத்தை ஏற்படுத்த அவர்கள் முற்பட்டார்கள் என்றும் சாகர கூறினார்.

தமது கட்சியின் உறுப்பினர்கள் மீது இனிமேலும் தாக்குதல் நடத்த இடமளிக்கப்போவதில்லை என்றும் சாகர காரியவசம் குறிப்பிட்டார். (அ)



# மத நல்லிணக்கத்தை ஏற்படுத்த யாழ்ப்பாணத்தில் நடைபவனி!




யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ். மாவட்ட சர்வமதக் செயற்குழுவால் மத நல்லிணக்கத்தை உருவாக்கும் வகையில் நடைபவனியொன்று முன்னெடுக்கப்பட்டது.

அபிவிருத்திக்கான சமூக அமைப்புகளின் வலையமைப்பின் ஏற்பாட்டில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் ஆரம்பித்த இந்த நடைபவனி வைத்தியசாலை முன் வீதியூடாக நூலகத்தை வந்தடைந்தது.

இதன்போது தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜெகான் பெரேரா, வவுனியா பல்கலைக்கழக வேந்தர் எஸ்.மோகனதாஸ் மற்றும் நான்கு மதத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மதகுருமார், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

# எச்.ஐ.வி. தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 21

2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2023 முதற்காலாண்டில் எச்.ஐ.வி தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் தேசிய பாலியல் நோய் / எய்ட்ஸ் தடுப்பு திணைக்கள புள்ளிவிவரத் தகவல்களில் தெரியவந்துள்ளது.

எச்.ஐ.வி தொற்றால் 2022 முதல் காலாண்டில் 4,404 பேர் பாதிக்கப்பட்டதாக இனங்காணப்பட்டனர்.

இந்நிலை, இவ்வாண்டில் சுமார் 600 பேரால் அதிகரித்து 5,011 ஆக உயர்ந்துள்ளது. அதேபோல், இவ்வருட முதற்காலாண்டில் 3,806 ஆண்களும் 1,361 பெண்களும் எச்.ஐ.வி தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 15 வயதுக்கும் 24 வயதுக்குமிடைப்பட்ட 23 ஆண்களும், மூன்று பெண்களும் இத்தொற்றுக்கு ஆளாகியுள்ளனர். எச்.ஐ.வி தொற்றுக்களால் பாதிக்கப்படு பவர்களில் பெண்களை விட, ஆண்களின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளதையும் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

இதேவேளை, மாற்றுப்பாலினத்தவர்கள் ஒன்பது பேரும் இத்தொற்றுக் குள்ளாகியுள்ளனர்.

எச்.ஐ.வி தொற்றினால் இவ்வாண்டில் இதுவரையிலான காலப்பகுதியில் 15 பேர் மரணமானமை குறிப்பிடத்தக்கது.

# 2 கிலோ கேரள கஞ்சாவுடன் பளையில் இருவர் சிக்கினர்!

யாழ்ப்பாணம், ஜூன் 21

2 கிலோ 160 கிராம் கேரளக் கஞ்சாவுடன் இருவர் நேற்று முன்தினம் அதிகாலை பளைப் பகுதியில் சுற்றுக்காவலில் ஈடுபட்ட பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

பட்டா ரக வாகனம் ஒன்றில் கஞ்சா பொதியை மறைத்து வைத்திருந்த நிலையில் பொலிஸார் அதனைச் சோதனையிட்டபோது கஞ்சாப் பொதி கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவர் கடந்த வருட இறுதிப் பகுதியில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் மீண்டும் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வடமராட்சி மகளீர் அணித் தலைவியின் கணவர் எனவும், அவர் ஏற்கனவே கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# மலையக தமிழ்க் கட்சிகளுடன் ஜனாதிபதி விரைவில் சந்திப்பு

கொழும்பு, ஜூன் 21

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், மலையக தமிழ்க் கட்சிகளுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று விரைவில் இடம்பெறவுள்ளது.

ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாடு திரும்பிய பின்னர் இச்சந்திப்பு நடைபெறவுள்ளது என தெரியவருகின்றது.

மலையக தமிழ்க் கட்சிகள் ஜனாதிபதியிடம் விடுத்த கோரிக்கையின் பிரகாரமே இதற்கான சந்திப்பு இடம்பெறவுள்ளது.

மலையக பகுதிகளுக்கான அபிவிருத்திகள் மற்றும் உரிமைகள் சம்பந்தமாக இதன்போது பேசப்படவுள்ளது.

வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்க் கட்சிகளுடன் ஜனாதிபதி பேச்சுகளை ஆரம்பித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## போதை...

குற்றச்செயல்களை குறைக்கும் வகையில் பொலிஸ் அதிகாரிகள் களத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ குறிப்பிட்டார்.

## பாணின்...

றம் உள்ளிட்ட விடயங்க ளைக் கருத்திற் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், பணிஸ் உள்ளிட்ட ஏனைய பேக் கரி உற்பத்திகளின் விலையும் குறைக்கப்படவுள்ளது. (அ)

## இன்று...

ஆலயத்தை சொந்தம் கொண்டாடுவதில் இன முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இந்நிலையில், நாளை (இன்று) சிங்கள - பௌத்தர்கள் குருந்தூர்மலைக்கு வருகை தந்து சில நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர். இதன் காரணமாக ஒரு நெருக்கடி நிலை - மோதல் சூழல் உருவாகக்கூடிய அச்சம் ஏற்பட்டிருக்கின்றது.

ஆகவே, அரசாங்கம் சட்டப்படி எல்லோரையும் சமமாக மதித்து பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்து மோதல் சூழல் ஏற்படாத வகையில் செயல்பட வேண்டும். இலங்கையில் எல்லா மதங்களையும் - எல்லா இனங்களையும் எல்லோரும் மதிக்கக் கூடிய ஒரு சூழல் உருவாக வேண்டும்.

எல்லா இன மத மக்களும் சுதந்திரமாக தமது மத அனுஷ்டானங்களை - வழிபாடுகளை செய்யக்கூடிய உரிமை இருக்க வேண்டும்.

இதன் அடிப்படையிலேயே அரசாங்கத்திடம் நாம் 21ஆவது அரசமைப்பு திருத்தம் மூலம் ஓர் ஆணைக்குழுவை அமைத்து மத சுதந்திரத்தை நிலை நாட்டுமாறு கோரினோம்.

நாங்கள்தான் இந்த மண்ணின் ஆதிக் குடிகள், இந்த மண்ணின் மைந்தர்கள் அல்லது நாங்கள் தான் எண்ணிக்கையில் அதிகமானவர்கள் என்று கூறி, நாங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு இனமும் போட்டி போட்டுக் கொண்டு நமக்குள் அடிபடுகின்றோம்.

இதுதான் இலங்கையில் இப்போது இருக்கின்ற பெரும் பிரச்னை. இப்படியான உரிமை கோரல்களை நிறுத்திவிட்டு எல்லோருக்கும் சம வாய்ப்பு கிடைக்கக் கூடிய ஒரு சூழலை உருவாக்க வேண்டும்.

அதுதான் இலங்கைக்கு பொருத்தமானது - இலங்கைக்கு தேவையானது - என்றார்.

இதனிடையே, - பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், புதிய ஊடக சட்டம் தொடர்பில் மக்கள் மத்தியில் அச்ச நிலை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் உங்கள் கருத்து? என்று ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர்,

மனித உரிமைகளை மீறக்கூடிய வகையில் பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் வடிவமைக்கப்பட்டிருக்கின்றது. இது மிகவும் ஆபத்தானது - அபாயகரமானது. மனித உரிமைகளுக்கு எதிரானது. இதிலே ஊடகங்கள் தொடர்பான கட்டுப்பாடுகளை விதிக்கும் நோக்கில் கொண்டுவரப்படவுள்ள சட்டமானது எமது கருத்து சுதந்திரத்தை மறுக்கின்றது - பறிக்கின்றது.

குறிப்பாக அரசாங்கத்தின் சரி பிழைகளை விமர்சிப்பதை மட்டுப்படுத்துகின்றது. நாட்டிலே ஓர் ஊழல் நடந்தால் நாங்கள் அதற்கு எதிராக பேச முடியாத ஒரு சூழ்நிலை உருவாக்கப்படுகின்றது.

அதிகார துஷ்பிரயோகம் நடந்தால் அது தொடர்பில் ஊடகங்கள் பேச முடியாத சூழல். ஏனென்றால் ஒவ்வொரு வருடமும் ஊடகங்கள் அனுமதியைப் புதுப்பிக்க வேண்டியுள்ளதால் அனுமதியைக் கொடுக்காது ஊடகங்களை கட்டுப்படுத்த அல்லது ஊடகங்களைத் தடை செய்வதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொள்கின்றது.

இது சிவில் சமூகத்துக்கு எதிரானதாக உள்ளது. மனித உரிமைகளை - கருத்துக்களை நசுக்கும் வகையிலேயே இந்த சட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன - என்றார். (ஐ)

## பாதீட்டு...

நிறைவேற்றப்பட்டது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தங்களுடைய சொந்தக் கட்சியின் பொருளாதார அறிக்கைகளை சுதந்திரமான பகுப்பாய்வுக்காக வரவு - செலவு திட்ட பணிமனைக்கு அனுப்புவதற்கான புதிய விதியை இந்த சட்டம் கொண்டுள்ளது.

அத்துடன், முன்மொழியப்பட்ட யோசனைகளை பகுப்பாய்வு செய்ய பாராளுமன்றால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சுயாதீனமான நிறுவனமாகவும் பாராளுமன்ற வரவு - செலவு பணிமனை செயல்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பிரபலங்கள்...

அடைந்துள்ள பின்னணியில் பாராளுமன்ற வரவு - செலவுத் திட்ட காரியாலய சட்டமூலம், ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் என்பன முக்கியமானவை. வரவு - செலவு திட்ட பணிமனை அரசாங்க நிதி தொடர்பான தெரிவுக்குழுவின் விடயதானங்களுக்குள் உள்வாங்கப்படும். ஆகவே இந்த பணிமனை சிறந்த முறையில் செயற்படுவதற்கான பல யோசனைகளை முன்வைத்துள்ளோம்.

பொருளாதார முன்னேற்றத்துக்கு கடுமையான மறுசீரமைப்புகளை முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நம்பிக்கை என்பதை முன்னிலைப்படுத்தி சகல விடயங்களையும் செயல்படுத்த முடியும். கடந்த காலங்களில் சர்வதேச நாணய நிதியத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை புறக்கணித்து அரசாங்கங்கள் செயல்பட்டன. கசினோ வரி அறவிடல் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துக்கு வழங்கிய வாக்குறுதியை அரசாங்கம் நிறைவேற்றவில்லை.

டிஜிற்றல் சேவைகளுக்கு எவ்வித வரிகளும் அறவிடப்படுவதில்லை. நல்லாட்சி அரசாங்கத்தில் கொண்டு வரப்பட்ட டிஜிற்றல் சேவை தொடர்பான வரி தொடர்பான சட்டமூலம் வெகு விரைவில் சட்டமாக்கப்பட வேண்டும். பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் காலத்தில் இடம்பெற்ற சீனி வரி குறைப்பு மோசடி தொடர்பான அறிக்கையை கோப் குழுவின் முன்னாள் தலைவர் அநுர பிரியதர்ஷன யாப்பா பாராளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார். 2020ஆம் ஆண்டு வழங்கப்பட்ட சீனி வரி குறைப்பால் 1. 6 கோடி ரூபாய் அரச வருவாய் இழக்கப்பட்டுள்ளது. பிணைமுறி மோசடியை காட்டிலும் இந்த மோசடி பாரதூரமானது.

தேசிய கடன்களை மறுசீரமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதால் வங்கி கட்டமைப்பு நிச்சயம் பாதிக்கப்படும். ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் சாதாரண வைப்புக்களுக்கும் பாதிப்பு ஏற்படும்.

பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய மதுசார உற்பத்தி நிறுவனம் இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகிய அரச வங்கிகளிடம் இருந்து பெற்ற 700 கோடி ரூபாயை மீள செலுத்தவில்லை. இதற்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வங்கி கட்டமைப்பு பலப்படுத்த வேண்டுமாயின் தேசிய கடன் மறுசீரமைப்புக்கு முன்னர் பலம் வாய்ந்த தரப்பினர் வங்கிகளிடமிருந்து பெற்றுள்ள கடன்களை மீள பெற்றுக்கொள்ள நிதியமைச்சு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நிதி அமைச்சின் செயல்பாடுகள் கேள்விக்குள்ளான நிலையில் உள்ளது. வரி அதிகரிப்பால் தொழில்துறையினர் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள். தேசிய கடன் மறுசீரமைப்பால் பெருந்தோட்ட தொழிலாளர்கள், ஆடைத் தொழிலாளர்கள் உட்பட உழைக்கும் மக்கள் பாதிக்கப்படுவார்கள். ஆகவே நடுத்தர மக்களை பாதுகாப் பதற்காக கடன் மறுசீரமைப்புக்கு முன்னர் முக்கிய வர்த்தகர்கள், செல்வந்தர்கள் அரச வங்கிகளிடமிருந்து பெற்ற ஒரு இலட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாய் கடனை மீளப் பெற நிதி அமைச்சு விசேட கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (ஐ)

# அரசாங்கத்தின் நிவாரணங்கள் தடையின்றி வழங்கப்படுகிறது

**பதில் நிதி அமைச்சர் செஹான்**

கொழும்பு, ஜூன் 21

அரசாங்கம் வழங்கும் நிவாரண கொடுப்பனவுகள் முறையாக வழங்கப்பட்டு வருகின்றன. ஏதாவது பிரதேசங்களில் அதில் குறைபாடுகள் காணப்பட்டால் அவற்றை நிவர்த்தி செய்ய விரைவான நடவடிக்கை எடுக்கப்படும் என பதில் நிதி அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை எதிர்க்கட்சி உறுப்பினர் சந்திம வீரக்கொடி எம். பி. எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், அரசாங்கத்தால் மூத்த பிரஜைகளுக்காக மாதாந்தம் வழங்கப்படும் கொடுப்பனவு கடந்த மூன்று மாதங்களாக வழங்கப்படவில்லை. இதேவேளை, வலது குறைந்தவர்களுக்காக வழங்கப்படும் கொடுப்பனவும் இவ்வாறு வழங்கப்படுவதில்லை அது தொடர்பில் நிதியமைச்சு உடனடி கவனத்தை மேற்கொள்ள வேண்டும்.

நிதி அமைச்சானது மக்களுக்கு வழங்கும் நிவாரண கொடுப்பனவுகளில் எத்தகைய குறைபாடுகளையும் வைக்கவில்லை. அவ்வாறான கொடுப்பனவுகள் உரிய காலத்தில் முறையாக வழங்கப்பட்டு வருகின்றன. ஏதாவது பிரதேச செயலாளர் பிரிவுக்கு அந்த கொடுப்பனவுகள் கிடைக்கவில்லை என்றால் நாம் சமூக ஊக்குவிப்பு அமைச்சின் மூலம் அதனை ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஐ)

## பலாலி...

பட்டுள்ளது. இதற்காக 16. 8 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது என்று கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

பலாலி விமான நிலையத்தை முன்னர் விரிவாக் கம் செய்வதற்கு இந்தியா அனுமதி கோரியிருந்தது. ஆனால், அரசாங்கம் அதனை நிராகரித்து விட்டது. இந்த நிலையி லேயே தற்போது பெரிய விமானங்கள் தரையிறங்கக் கூடியவாறு விரிவாக்கம் செய்யப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழர்மீது...

உரிமை மற்றும் பாதுகாப்பு மற்றும் சமாதானத்துக்கு அவுஸ்திரேலிய பசுமைக் கட்சி ஆதரவு அளிக்கிறது என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இன்று நான் தமிழ் மக்களுக்கு ஆதரவைத் தெரிவிக்க விரும்புகின்றேன். தமிழ் அகதிகள் பேரவையின் அலுவலகத்தை திறந்துவைக்கும் நிகழ்வுக்கு என்னை அவர்கள் அழைத்தது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். தமிழ் அகதிகள் பேரவை தமிழ் அகதிகளுக்கு தனிப்பட்ட ஆலோசனைகளை வழங்குதல், கல்வி தொடர்பான உதவிகளை வழங்குதல், அகதிகள் தொடர்பான பரப்புரைகளை முன்னெடுத்தல் போன்ற முக்கியமான சேவைகளை வழங்கி வருகின்றது.

"கடந்த மாதத்துடன் முள்ளிவாய்க்கலில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டு 14 வருடங்களாகின்றன. ஆனாலும், அதற்கு காரணமானவர்கள் எவரும் இதுவரை பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவில்லை. தமிழ் மக்களின் தனி நாட்டுக்கான போராட்டத்துக்கு எதிரான இராணுவ நடவடிக்கையின்போது இவர்கள் முள்ளிவாய்க்காலில் சிக்க வைக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

"அவர்களில் பலர் இன்னமும் இலங்கை அரசாங்கத்திலும் இராணுவத்திலும் உயர்பதவிகளில் நீடிக்கின்றனர். அவுஸ்திரேலிய பசுமைக் கட்சி, இலங்கையில் தமிழர்களுக்கு எதிராகத் தொடரும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையை கண்டிக்கின்றது. தமிழ் மக்களுக்கு உள்ள சுயநிர்ணய உரிமை, பாதுகாப்பு மற்றும் சமாதானத்துக்கு எங்கள் கட்சி ஆதரவளிக்கின்றது.

அவுஸ்திரேலியாவில் தமிழ் அகதிகளின் அடைக்கல கோரிக்கைகளே அதிகளவு நிராகரிக்கப்படுகின்றன. எங்கள் நாட்டில் உள்ள தமிழர்கள் நாடு கடத்தப்படலாம் என்ற அச்சத்தில் வாழ்கின்றனர் - என்றும் கூறினார்.

அவுஸ்திரேலிய பசுமைக் கட்சி 76 உறுப்பினர்களை கொண்ட செனட் சபையில் 9 உறுப்பினர்களை கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கை...

குறித்து தனது புதுப்பிப்புகளை சமர்ப்பிப்பார்.

ஜெனிவா நேரம் பிற்பகல் 3 மணிக்கு - இலங்கை நேரம் மாலை 6.30 மணிக்கு இந்த வாய்மூல அறிக்கை சமர்பிக்கப்படும்.

முன்னதாக, நேற்று முன்தினம் ஆரம்பமான ஐ. நா. மனித உரிமைகள் பேரவை கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஆணையாளர், "மனித உரிமைகள் பேரவை நிறைவேற்றிய பொறுப்புக்கூறல் தீர்மானங்களை இலங்கை நிராகரித்தமை கவலையளிக்கிறது. பரிந்துரைகளை இலங்கை நடைமுறைப்படுத்த வேண்டும்", என்றும் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐ. எம். எவ்....

டிய நிலை ஏற்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடனான கொடுக்கல் - வாங்கல் வெளிப்படை தன்மையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும் - என்று அந்தக் கட்சியின் எம். பிக்கள் கருத்து வெளியிட்டனர்.

அத்துடன், சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் செய்துள்ள ஒப்பந்தம் பாதகமான நிபந்தனைகளுடன் கைச்சாத்திடப்பட்டு -அந்த உடன்படிக்கை நாட்டுக்கு முன்வைக்கப்படவில்லை என்ற அடிப்படையில் அதனை ஏகமனதாக எதிர்ப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டதாக அந்தக் கட்சி தெரிவித்துள்ளது. (அ-ஐ)

## பிரபாகரனின்...

களை அரசாங்கம் வெளிப்படுத்தவில்லை. இது விடயத்தில் பல சர்ச்சை கள் நிலவி வருகின்றன.

இந்த நிலையில், புலிகளின் தலைவர் பிரபாகரனின் மரண பரிசோதனை மற்றும் மரபணு பரிசோதனைகளை வெளிப்படுத்த வேண்டும் என்றும், அவரின் உயிரிழப்பை உறுதிப்படுத்த யாரிடமிருந்து மரபணு மாதிரிகள் பெறப்பட்டன என்பதையும் வெளிப்படுத்த வேண்டும் எனவும் கோரி ஊடகவியலாளர் ஒருவர் தகவல் அறியும் உரிமை சட்டம் ஊடாகக் கோரிக்கை விடுத்தார்.

2022 டிசெம்பரில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சு, இராணுவ தலைமையகத்திடம் இதற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

"தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் இந்தத் தகவல்களை வழங்கினால் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படும்" என்று குறிப்பிட்டு இலங்கை இராணுவமும் பாதுகாப்பு அமைச்சும் ஊடகவியலாளரின் கோரிக்கையை நிராகரித்துள்ளன.

இது தொடர்பில், தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவுக்கு ஊடகவியலாளர் முறைப்பாடு அளித்துள்ளார் என்று அறிய வருகின்றது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# துணிவு இருந்தால் தேர்தலை நடத்துக!

### அரசுக்கு சஜித் மீண்டும் சவால்

கொழும்பு, ஜூன் 21

**துணிவு இருந்தால் மாகாண சபைத் தேர்தலையாவது உடன் நடத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அரசுக்கு சவால் விடுத்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இந்த சவாலை விடுத்தார்.

"மக்கள் எவ்வாறானதொரு ஆணையை வழங்கினாலும் அதனை ஏற்பதற்கு நாம் தயார். எனவே, மக்களின் நிலைப்பாட்டை அறிய தேர்தல் நடத்தப்பட வேண்டும்.



அது எந்த தேர்தலாக இருந்தாலும் அதனை எதிர்கொள்வதற்கு நாம் தயார்.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளாட்சிச்சபைத் தேர்தல் ஆகியவற்றில் எதையாவது ஒன்றை விரைவில் நடத்தவும்"எனவும் சஜித் குறிப்பிட்டார். (அ)

## இந்திய மீனவர்கள் ஒன்பது பேர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 21

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒன்பது இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் தமிழ் நாட்டின் இராமேஸ்வரம் பகுதியை சேர்ந்தவர்கள் எனத் தெரியவருகிறது.

நெடுந்தீவு அருகே நேற்று முன்தினம் இரவு இந்திய மீனவர்களின் படகள் மீன்பிடியில் ஈடுபட்டவேளை அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர் ஒரு படகை கைப்பற்றினர்.

அதிலிருந்த ஒன்பது மீனவர்களையும் கடற்படையினர் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் மயிலிட்டிப் பகுதிக்கு அழைத்து வரப்பட்டு கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (அ)

## பொதுநலவாய செயலாளரை சந்தித்தார் ஜனாதிபதி ரணில்



கொழும்பு, ஜூன் 21

பிரிட்டனுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொதுநலவாயச் செயலாளர் நாயகம் பற்றிசியா ஸ்கொட்லாந்தை சந்தித்துள்ளார்.

இதன்போது காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான தனது உத்திகளை பகிர்ந்துகொண்ட ஜனாதிபதி, இந்த முயற்சிகளில் பொதுநலவாய நாடுகளின் ஈடுபாடு குறித்தும் ஜனாதிபதி கலந்துரையாடினார்.

பொதுநலவாய அமைப்பினுள் டிஜிற்றல் மயமாக்கல் திட்டங்கள் குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பற்றிசியா ஸ்கொட்லாந்துடன் கலந்துரையாடினார். (அ)

## உயர் இராணுவ அதிகாரியின் பாதுகாப்புக்கு 7 வாகனங்கள்!

### சபையில் சந்திம வீரக்கொடி சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூன் 21

உயர் இராணுவ அதிகாரி ஒருவரின் வாகனத்துடன் ஏழு வாகனங்கள் பாதுகாப்புக்காகச் சென்றமை குறித்து காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி சபையில் நேற்று சுட்டிக்காட்டினார்.

மக்கள் உணவு கிடைக்காமல் துன்பங்களை எதிர்நோக்கியுள்ள இந்த சந்தர்ப்பத்தில் இதுபோன்ற உயர் அதிகாரிகளுக்கு அதிகளவு பணத்தைச் செலவழிப்பது சரியா என்றும் அவர் பாராளுமன்றில் கேள்வியெழுப்பினார்.

மூன்று மாதங்களாக முதியோருக்கான உதவித் தொகை வழங்கப்படவில்லை என்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித்தொகை வழங்கப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான சூழலில் இராணுவ உயர் அதிகாரி ஒருவருக்கு ஏழு வாகனங்களை அணிவகுப்புக்கு அழைத்துச் செல்ல பணம் ஒதுக்கியது யார் என்றும் அவர் கோரினார். (அ)

## நாட்டை மீட்க சகல கட்சிகளின் ஆதரவும் அரசுக்கு மிக அவசியம்!

கொழும்பு, ஜூன் 21

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்குக் கூட்டணி உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளினதும் ஆதரவு மிகவும் அவசியம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கிஅயில்-

நிலையானதொரு தேசிய வேலைத்திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உருவாக்கியுள்ளார்.

2048 ஆம் ஆண்டு வரை அந்த வேலைத்திட்டத்துடன் பயணிக்குமாறு ஜனாதிபதி கூறியுள்ளார்.

எனவே, பொருளாதார சமரில் வெல்வதற்கு எமக்கு

**வலியுறுத்துகிறார் வஜிர அபேவர்த்தன**

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி, சுதந்திரக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட இந்நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளினதும் ஆதரவு அவசியம்-என்றார்.

## சிமெந்து வரி அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 21

இறக்குமதி செய்யப்படும் சிமெந்துக்கு விதிக்கப்பட்டுள்ள செஸ் வரியை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜூன் 17ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் குறித்த வரி திருத்தப்பட்டுள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, ஒரு கிலோ கிராம் செயற்கை நிறம் கொண்ட அல்லது நிறமற்ற வெள்ளைச் சிமெந்துக்கு விதிக்கப்பட்டிருந்த 3 ரூபாய் செஸ் வரி 5 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், 50 கிலோ கிராம் மற்றும் அதற்கும் குறைவான பொதிகளில் இறக்குமதி செய்யப்படும் ஏனைய போர்ட்லாண்ட் சிமெந்து ஒரு கிலோ கிராமுக்கு விதிக்கப்படும் 5 ரூபாய் செஸ் வரி 8 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேநேரம் 50 கிலோ கிராம் மற்றும் அதற்கு மேற்பட்ட பொதிகளில் மொத்தமாக இறக்குமதி செய்யப்படும் ஏனைய போர்ட்லாண்ட் சிமெந்து ஒரு கிலோ கிராமுக்காக அறவிடப்படும் 3 ரூபாய் வரி 5 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (அ)

## கடமை நேரப் பிரச்னையால் இரண்டு தாதியர்கள் மோதல்

கொழும்பு, ஜூன் 21

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் ஒரே விடுதியில் பணிபுரியும் ஆண் மற்றும் பெண் தாதியருக்கிடையே ஏற்பட்ட வாக்குவாதம் மோதலாக மாறி இருவரும் காயமடைந்து சிகிச்சைக்காக அதே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என அநுராதபுரம் போதனா வைத்தியசாலை பொலிஸார் தெரிவித்தனர்.

அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் ஏழாவது விடுதியில் பணி புரியும் இருவரே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏழாவது விடுதியில் சிற்றூழியர்களுக்காக ஒதுக்கப்பட்ட அறையில் குறித்த இருவரும் நேற்றுக் காலை உணவு அருந்திக்கொண்டிருந்தபோது கடமை பிரச்னை காரணமாக ஏற்பட்ட வாக்குவாதத்தின் பின்னர் அது மோதலாக மாறியதாக பொலிஸார் கூறினர்.

இதன் பின்னர் இருவரும் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் துலான் சமரவீரவிடம் கேட்டபோது, இந்த சம்பவம் தொடர்பில் முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், சம்பவம் தொடர்பில் ஆரம்பகட்ட விசாரணைகளை மேற்கொண்டு அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறினார். (அ)

## புதிய பொலிஸ்மா அதிபர் அடுத்த வாரம் நியமனம்

கொழும்பு, ஜூன் 21

புதிய பொலிஸ்மா அதிபர் அடுத்த வாரம் நியமிக்கப்படவுள்ளார் என தெரியவருகின்றது.

பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவின் சேவைக் காலம் எதிர்வரும் 26ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன மார்ச் 26 அன்று ஓய்வு பெறவிருந்தார். எனினும், அவருக்கு மூன்று மாத சேவை நீடிப்பு வழங்கப்பட்டது.

அடுத்த பொலிஸ் மா அதிபர் பதவிக்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்களான தேசபந்து தென்னக்கோன், நிலந்த ஜயவர்தன, லலித் பத்திநாயக்க, பிரியந்த வீரசூரிய மற்றும் அஜித் ரோஹண ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளதுடன், யாரை நியமிப்பது என்பது தொடர்பில் இதுவரை உறுதியான தீர்மானம் எடுக்கப்படவில்லை.

இது தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸிடம் வினவியபோது, புதிய பொலிஸ் மா அதிபர் தொடர்பில், ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னர் அவருடன் கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்படும் எனக் கூறினார். (அ)

## பத்து கோடி ரூபாவுக்கும் அதிகமான பணம் மோசடி

### ஏமாற்றப்பட்டனர் 50 பேர்

கொழும்பு, ஜூன் 21

ஐரோப்பிய நாடுகளில் தொழில் வழங்குவதாகக் கூறி பலரிடம் பத்து கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக மிரிஹான தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரின் மோசடியில் கிட்டத்தட்ட 50 பேர் சிக்கியுள்ளதாக பொலிஸார் கூறினர்.

மிரிஹான தலைமையகத்தின் தலைமைப் பொலிஸ் பரிசோதகரிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபருக்கு எதிராக மிரிஹான தலைமையக பொலிஸாருக்கு மாத்திரம் 15 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கு மேலதிகமாக, நாட்டின் பல்வேறு பகுதிகளில் சந்தேக நபர் பலரை ஏமாற்றிய பண மோசடிகள் தொடர்பாக நாடளாவிய ரீதியில் பொலிஸாருக்கு முப்பதுக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பத்து கோடிக்கும் அதிகமான பணம் மோசடி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், சந்தேக நபர் கோட்டை மாதிவெல வீட்டில் இருப்பதாக கிடைத்த தகவலின் பேரில் உடனடியாக செயல்பட்ட தலைமை பொலிஸ் பரிசோதகர் பொலிஸ் குழுவுடன் சென்று சந்தேக நபரை கைது செய்ததாக தெரிவிக்கப்பட்டது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.06.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.